# சுடர்

கலை இலக்கியத்
திங்கள் இதழ்




**புரட்டாதி 1982 விலை ரூபா 2. 00**

# வாசகர் வாய்மொழி

இப்பொழுது நேரகாலத்திற்கு முன்னரே 'சுடர்' வருவதில் எமக்கு மகிழ்ச்சி! கங்கா மங்கை கூறியது போல் பிரபலமென்ற முத்திரையுடையவர்களின் கதைகளையே தொடர்ந்து பிரசுரித்து இளம் பயிர்களை முளையில் கிள்ளாது எங்களுக்கும் வளர வழி வகுத்துத் தாருங்கள். சுடரில் வரும் அரட்டையும், காலபலனும், பல இரகசியங்களை வெளிச்சமாக்குகிறதே! அருமை!

ஸ்ரீதேவிப்பிரியா. பள்ளக்கெட்டுவ,

O O O O

தாவடி ஆய்வரங்கு பேச்சு எதிரொலிகள் அம்சத்தில் காவலூர் எஸ். ஜெகநாதனுக்கு பெண் எழுத்தாளர்கள் நல்ல சாட்டையடி கொடுத்திருக்கிறார்கள். கேள்வி - பதில், காலபலன், அரட்டை சற்று சூடாகவே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இலக்கிய சோலையின் பக்கங்களுக்கு ஏனிந்த மாறுபாடு? அறுவையை வாசித்து வாய்விட்டு சிரித்தேன்.

கலைமாமணி. காரைநகர்,

O O O O

ஆவணி சுடரை எல்லா வேலைகளையும் தள்ளிவிட்டு ஒரே மூச்சில் படித்து முடித்துவிட்டு கீழே வைத்த பின்னரே எனது சமையல் வேலைகளைக் கவனித்தேன். ஆகா சுடரில் இடம்பெற்ற எல்லா அம்சங்களும் தேன் போன்று இனித்தன. இலக்கிய சோலையின் தொடர்ச்சி பக்கங்களுக்கு ஏனிந்த மாறுபாடு?

சிவமணி மாணிக்கவாசகர். காரைநகர்,

O O O O

"ஆவணி மாத சுடர் திங்கள் இதழ் அருமையான முத்தமிழ் மலர். அட்டைப்படமதிலே ஆரணங்குதேவதை அவளின் அருகினிலே அழகு மன்மதனும் புதிய தமிழ் படைப்புக்கள் அத்தனையும் திக்கிக்கும் தேன்துளிகள் மலர் குறுகித்தான் விட்டாலும் தரம் கூடியே இருக்கின்றது. எத்தனை நான் சொன்னாலும் உன்னை வர்ணிக்க வார்த்தைகளில்லை"

எஸ் நாகராஜா. செக்கடிப்புலவு,

O O O O

'தனக்குத்தானே வெட்டும் குழியை' தார்மீக அரசருக்கு நினைவு படுத்தியமைக்கு ஜே. ஆர். நன்றி கூறுவார் என்றே நினைக்கிறேன். கவிச்சரங்களில் ராம்ஜீ வடித்த அங்கும் இங்கும் கவிதை பிரமாதம். பன்விலை சாந்தா எழுதிய பெண்ணாய் பிறந்ததினால்..... கவிதை அபாரம். காலபலன்களை பாராட்ட வார்த்தைகளே இல்லை. அரட்டை மிகவும் நன்று. அரி அண்ணாவின் சற்று சூடான பதில்களுக்கு பாராட்டுக்கள். இலக்கியச்சோலையில் உலாவிவந்தேன். அன்புமணி எழுதிய மனைவி அமைவதெல்லாம் பரிசுக்கதை பலேஜோர். எதிரொலிகள் போர் அடிக்கிறது.

த. சிவநாதன். செட்டிகுளம்,

O O O O

நரிக்குறத்தி ஒருவனின் பின்னணியில் சிரிப்பைத்தரும் சிம்மத்தின் சீறல்களான காலபலன்கள் கலகலத்து நிற்கின்றன. தொடரட்டும் தமிழ்த்தலைவர்கள் பாலும். குத்திக் கிழித்து கூறுபோட்டுக் காண்பிப்பதில் இந்த 'அரட்டை' ஒரு படி மேல் நிற்கிறது. இந்த 'அரட்டை'க்கு எந்த வாய் நோயும் வந்து விடக்கூடாதே என்று வேறு கவலையாக இருக்கிறது. 'அரி' அண்ணாவின் பதில்கள் பல்சுவை அம்சங்களாய் அமைந்திருக்கின்றன. ஆனால் வெரித்தாஸ் தமிழ்பணி'க்கு மிக 'சோட்' ஆக வெரித்தாங்ஸ்' உடன் நிறுத்திக்கொண்டு விட்டார். 'வெரித்தாஸ் தமிழ்ப்பணி' பற்றி நாலுவார்த்தை பாராட்டி 'தாங்ஸ்' சொல்ல வார்த்தைகள் கிடைக்கவில்லையா?

செல்வி. கங்கா - மங்கை. சரசாலை,

O O O O

'தமிழ் போதும் "கவிதை தரம்" "அக்கினிக்குஞ்சுகள்" கதை உரம்! பதிலோடு காலபலன் அரட்டை வரைந்தது நல்ல கரம். "மனைவி அமைவதெல்லாம்" கதையினில் இல்லைப் புதுமை! "காவியமானவள்" அடைகின்றாள் முதுமை. மரபுக் கவிதைகட்கு ஏனிந்த வறுமை? மாதம் ஒன்றுக்கு மூன்று முழுமையான மரபுக் கவிதைகட்கு இடங் கொடுத்தால் வளருமே! திறமை!

"நிலாதமிழின்தாசன். நிலாவெளி - 3,

O O O O

ஓவியர் குமாரவேலுவின் அழகிய ஓவியத்தை அட்டையில் தாங்கிவந்த ஆவணிச் சுடரைக் கண்ணுற்றேன். அரியார் பதில் நகைச்சுவையோடு, காரசாரமாய், சிந்தனையைத் தூண்டிவிடுகிறது இலக்கியச் சோலை, காவியமானவள், கவிச்சரங்கள் யாவும் சுடருக்கு மேலும் மெருகூட்டுகின்றன. ஏனைய அம்சங்களோடு, "அக்கினிக்குஞ்சுகள்" சிறுகதையும் அபாரம். எனினும் "தமிழ் போதும்" என்ற மரபுக் கவிதையின் தரமொன்றே சுடருக்குப் போதாதா?

காந்திமணாளன். திருகோணமலை,

O O O O

(இதன் தொடர்ச்சி 33 ம் பக்கம்)

**CHUDAR**
(கலை இலக்கியத் திங்களிதழ்)

வள்ளுவராண்டு: 2013
சுடர்: 8
ஒளி: 6
புரட்டாதி 1982

வெளியீடு:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை
கொழும்பு—12.

தொடக்கம்: சித்திரை 1975
தொலைபேசி: 23411

# நாம் பகடைக் காய்கள் அல்ல

சுதந்திர தமிழீழ அரசை மீள்விக்க போராடிக் கொண்டிருக்கும் நாம், ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி பதவிக்கான 'குதிரைரேஸ்' போராட்டத்துக்கு துணை போகலாமா? துணை போவதும் அவசியந்தானா?

பிரதான சிங்களக்கட்சிகளான ஐ. தே. க. வும், ஸ்ரீல. சு. க. வும், காலத்துக்குக் காலம் தமிழ் மக்களின் கழுத்தை நெரித்து வந்த, ஒரே உடலின் வலக்கரமும் இடக்கரமும் ஆகும். சமசமாஜ — கம்யூனிஸ்ட் கட்சிகளும் இதர இடதுசாரி உதிரிகளும் அக்கரங்களிலுள்ள விரல்களே!

அவசரகாலச் சட்டத்தின் கீழ் 'இன்பம்' போன்ற பல இன் தமிழ் இளைஞர்களை சித்திரவதை செய்து சுட்டு வீழ்த்தியும், இன்னும் பல இளைஞர்களை பனாகொடையில் அடைத்தும், நூல் நிலையம், கடைகளை எரித்து சாம்பராக்கியும் காட்டுத் தர்பார் ஆட்சி நடத்தியது போதாதென்று பயங்கரவாத — மனித உரிமை மீறல் சட்டங்களை இயற்றி நம் உடன் பிறப்புகளின் உயிர்களுக்கு உலை வைக்கத் துடிக்கும் 'பாத யாத்திரை' புகழ் தர்மிஷ்டர் ஜே. ஆரை எந்தத் தமிழனாவது ஆதரிக்கலாமா?

அடக்கு முறையால் எம்மை ஆட்டிவைத்தும் தமிழ் இளைஞர்களை விசாரணையின்றி தடுத்து வைத்து அலைக்கழித்தும், தமிழாராய்ச்சி மகாநாடு நடந்தவேளை பத்துக்கு மேற்பட்ட தமிழ் உயிர்களை பலிகொண்டும் இன ஒடுக்கல் ஆட்சி நடத்திய அம்மையாரின் அணியை மானமுள்ள எந்த தமிழனாவது ஆதரிக்கலாமா?

1972 ம் ஆண்டின் அரசமைப்பில் தமிழர் உரிமைகளை குழி தோண்டிப் புதைத்த கொல்வின் ஆர். டி. சில்வாவையோ, அன்றி, இனவாதக் குக்கல் நோய் பீடித்த மைத்திரிபால சேனநாயக்காவையோ அல்லது அங்கொன்றும் இங்கொன்றும் பேசி இரட்டைவேடம் போட்டுவரும் ரோகண விஜே வீரவையோ, பாடங்கள் பல படித்த நாம் ஆதரிக்கலாமா?;

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியாக எவர் 'முடி' தரித்தாலும் அவர் தமிழீழத்தை நோக்கி துப்பாக்கியால் குறி பார்ப்பார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே—

ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களின் பகடைக் காய்கள் அல்ல நாம் என்பதை எடுத்துக் காட்டவும், ஸ்ரீலங்காவின் தேர்தல்கள் எதிலும் எமக்கு அக்கறை இல்லை என்பதை வலியுறுத்தவும் இத்தேர்தலை நிராகரித்து உலகுக்கு நம் 'நிலை'யை உணர்த்திக் காட்டுவோமாக!

# இன்னொரு தடவை வருவாயா—?

—கண. மகேஸ்வரன்—

பாரதீ !
உன் நாமம்
பச்சைப் பசலைகள்
வாயிலும் நுழைந்ததால் -
'பாரதி' என்ற
கலைமகள் நாமம்
அனைவர் நெஞ்சிலும்
மறைந்து போயிற்று !

பாரதீ !
அன்பென்று கொட்டிய
உன் 'முரசொலி'
எங்கோ காற்றில் கலந்து
சிதைந்து —
'அழிவென்று' ஆர்ப்பரிக்கும்
இந்தச் சமூகத்தின்
'இழவொலி'
எங்கள் செவிப்பறைகளில்
நாராசமாக ஒலிக்கிறது !

பாரதீ !
நீ கண்ட
புதுமைப் பெண்களா
இங்கு நடமாடுவதாக
நினைத்துக் கொண்டிருக்கிறாய்-?
அல்ல; அல்ல !
ஆடைகள் முதல்
தலையலங்காரம் வரையிலும்—
காசு தேடி
கடல் தாண்டுவது வரையிலும்-
போதை தலைக்கேற்றி
புரண்டு உருள்வது வரையிலும்-
என்னவோ
சமத்துவமாய்த்தான்
நடக்கின்றார்கள் !

பாரதீ !
இந்தச் சமூகம்
என்றாவது திருந்துமென்று
நினைக்கிறாயா —?
தப்பு; தப்பு !
இன்னொரு தடவை
நீயும், உன் சகாக்களான
காந்திஜி - நேருஜி - வ.உ.சி.
என்று அண்ணா வரைக்கும்
யார்தான் வந்தாலும்
இந்தச் சாக்கடை மணத்தை
அகற்றவே முடியாதப்பனே !
வீண் முயற்சி; விட்டுவிடு

பாரதீ !
அஹிம்சை வழிநின்ற
உன் பாரத தேசமே
அல்லோல கல்லோலப்படுகிறது;
இராவணன் ஆண்ட
நமது நாடு எம்மாத்திரம்...?
சாதிப் பேய்களும்
இனவெறிப் பிசாசுகளுமாக
மயானக்காட்சிதான்;
மறுவார்த்தை சொல்வதற்கு
மனசு வருகுதில்லை !
ஏனது... விட்டுத்தள்ளு;
விஷயத்துக்கு வருவோம் !

பாரதீ !
உனக்காக ஒரு துளி
கண்ணீர் சிந்தி;
நீ காட்டிய வழியில்
நடக்கும் தைரியம்
எத்தனை பேர்க்கு
உன்டென்று கேட்கவாவது
இன்னொரு தடவை
நீயிங்கு வரத்தான் வேண்டும்;
வருவாயா —?

இவர்களின்

# ○ பிரார்த்தனை ○

**— சிம்மம் —**

இப்படி இருக்குமோ?

பகவான் சத்திய சாயிபாபா அவர்களை ஸ்ரீலங்கா பூமிக்கு அழைக்க ஐ. தே. க. வின் 'எடுபிடிகள்' பகிரதப் பிரயத்தனம் எடுத்து வருகின்றன அல்லவா? இதன் பின்னணி அரசியல் வியாபாரமாக இல்லாமல் வேறு எதுவாக இருக்க முடியும்? சாயி பகவான் ஸ்ரீலங்கா வந்தால் அரசியல் வாதிகளின் பிரார்த்தனை எப்படி இருக்கும் என கற்பனை பண்ணிப் பார்ப்போமா?

## திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன:

ஜெய ஜெய பகவானே! உன் மகிமையைப் பற்றி எனது சகாக்களான இராசதுரையும் தொண்டமானும், நிஸங்க விஜேரத்தினவும் எடுத்துக் கூறிய பின்னர்தான் உன் மீது அளவு கடந்த பக்தி எனக்கேற்பட்டிருக்கிறது. 'தெய்யனே!' நான் நம்பிய தெய்வங்கள் எல்லாம் என்னைக் காலை வாரி விடுமோ என்ற பயத்தால் 'நீயே தஞ்சம்' என்ற கடைசி முடிவுக்கு வந்திருக்கிறேன். உன் தயவை நாடும் என்னை கை விட்டு விடாமல் அருள் புரிவாய் அப்பனே! ஸ்ரீமா என்ற பறவையின் சிறகுகளை நான் வெட்டி விட்டது என்னவோ உண்மைதான். ஆனால் அதன் குஞ்சுப் பறவை வளர்ந்து கொக்கரிக்கத் தொடங்கி விட்டதே. என்ன செய்வேன் பாபா? உன்னை விட்டால் இனி வேறு யார் எனக்குத் துணை? 'உன் அருட் சக்தியால், ஜனாதிபதித் தேர்தலில் விழப்போகும் வாக்குகள் அனைத்தையும் ஐ. தே. க. வாக்காக மாற்றித் தர நின் கருணை வேண்டும் சுவாமி!.

## திரு. தொண்டமான்:

எனது குடும்பத் திருமணத்தின்போது அந்தரத்தில் இருந்து தாலியையவரவழைத்து தந்துதவிய அருட் பெருஞ் செல்வரே! உங்களை ஸ்ரீலங்காவுக்கு அழைத்த பெருமை என்னையே சாரும். ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களை உங்களின் பக்த கோடிகளாக்கிய எனக்கு பேரருள் புரிந்து விசேட வரமளிக்க வேண்டும் சுவாமி. தொடர்ந்தும் நான் தொழிலாளர் தலைவராகவும் முதலாளித்துவ அரசின் அமைச்சராகவும் இரட்டை வேடம் போட்டு தொழிலாளர்களுக்கு பட்டை நாமம் சாத்திவர வருமருள் புரிய வேண்டும். மாதச் சம்பள விவகாரத்தை தோட்டத் தொழிலாளர்கள் மனதிலிருந்து அகற்றி விடு அப்பனே!

## திரு. செ. இராசதுரை:

வெறும் சாமானியனாய் இருந்த என்னை அமைச்சர் பதவிக்கு உயர்த்திய என் பகவானே! அடுத்த பிறவியிலும் நான் மட்டுநகர் மண்ணிலேயே பிறக்க வேண்டும் சுவாமி! என் அரசியல் வியாபாரம் அந்த மண்ணைத் தவிர வேறு எந்த மண்ணில் விலை போக முடியும்? ஆனால் கவிஞர் காசி ஆனந்தனை மட்டும் அடுத்த பிறவியில் அங்கு பிறக்க வைத்து எனக்கு தலையிடியை ஏற்படுத்திவிடாதே. வரப் போகும் பாராளுமன்ற தேர்தலின் பின் நானே மட்டுநகரின் முடிசூடா மன்னனாக மீண்டும் விஸ்வரூபம் எடுக்க வேண்டும். அடுத்த அரசாங்கம் எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. பத்தாயிரம் வேலை வங்கிப் படிவங்கள் மட்டும் என் கையில் கிடைக்க வகை செய்தல் வேண்டும். ஆனால் இந்த தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சை மட்டும் மீண்டும் தந்துவிடாதே, ஏதாவது ஒரு 'கொடுக்கல், வாங்கல்' அமைச்சையோ அன்றி 'போக்குவரத்து' அமைச்சையே தந்துவிட வரமளித்தால் மட்டுநகர் கல்லடிக் கடற்கரையில் உனக்காக ஒரு கோயில் அமைத்து கும்பிடுவேன்.

## திரு. நிஸங்க விஜேரத்ன:

அவதார புருஷரே! ஸ்ரீலங்காவிலுள்ள தங்கள் பக்தர்களில் முதன்மையானவன் நானே. பாராளுமன்றத்தில் கூட ஒரு தடவை இது பற்றி பகிரங்கமாக நான் சொல்லியிருக்கிறேன். கண்டி தலதா மாளிகையின் 'தியவதன நிலமே' என்ற பதவியையும் அலங்கரிக்கும் நானே, உங்கள் பக்தன் என்று கூறிக் கொள்வதில் பெருமைப் படுகிறேன் என்றால் என் பக்தி எத்துணை உயர்வானது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் சுவாமி! டட்லி சேனநாயக்காவின் டெடிகம தொகுதி பிரதி நிதியாக இருக்கும் எனக்கு அவர் வகித்த அந்த உயர் பதவியையும் பெற்றுத் தர வர மருள வேண்டும்.

# சந்திப்பு!

## 'அமுதசுரபி' ஆசிரியருடன்



**சந்தித்தவர்: அனலை ஆறு. இராசேந்திரம்.**

இலக்கியச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு அண்மையில் ஈழம் வந்திருந்த 'அமுதசுரபி' ஆசிரியர் திரு. விக்கிரமன் அவர்களை சுடருக்காகப் பேட்டி கண்டேன். தமிழின் சிறந்த சரித்திர நாவலாசிரியர்களுள் ஒருவரான திரு. விக்கிரமன் 22 சரித்திர நாவல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் 'நந்திபுரத்து நாயகி, இராஜாதித்தன் சபதம், வல்லத்து இளவரசி, சோழ இளவரசன் கனவு' போன்றன பெரும் வரவேற்பைப் பெற்றவை. சரித்திர நாவல் மட்டுமன்றி சமூக நாவல், சிறுகதை முதலானவையும் பல படைத்துள்ளார். அவற்றுள் "இதயபீடம்" சமூகநாவல் வாசகர் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கும் ஒன்று. பாலியல் சினிமா முதலான முதலீடுகளால் பத்திரிகைத் துறை சமுதாயத்தைச் சீரழித்துவரும் இவ்வேளையில் நல்ல தரமான இலக்கியப் பத்திரிகையான அமுதசுரபியின் ஆசிரியராக 32 ஆண்டுகளாகப் பணிபுரிபவர். மட்டுமல்லாமல் அகில இந்திய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பொதுச்செயலாளராக இருந்து வருகிறார். சுடர் வாசகர்களுக்கு அவரின் பேட்டி நல்விருந்தாகும்.

கே: தங்கள் இலக்கிய வாழ்வின் ஆரம்பத்தைச் சொல்வீர்களா?

ப: 1943 ஆம் ஆண்டு பள்ளிப் பருவத்தில் என்னுடைய சிறுகதை எழுதும் பணி ஆரம்பித்துவிட்டது. அப்போது எனக்கு வயது 15.

கே: எழுத்துலகில் தங்களுக்கு உந்துசக்தியாக விளங்கியவர் அல்லது விளங்கிய சாதனம் எது?

ப: நாட்டில் விடுதலைப் போராட்டம் கொந்தளிப்புடன் நடந்து கொண்டிருந்த சமயம் தினசரிகளின் செய்திகளும் தேசத் தலைவர்களின் சொற்பொழிவுகளும் இளம் பருவத்தினனான என்னைக் கவர்ந்தன. அது சம்பந்தமான எழுத்துக்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டினேன். பள்ளிப்பாடப் புத்தகங்களை விட பொதுநூல்கள் என்னைக்கவர்ந்தன. அமரர் கல்கியின் எழுத்துக்கள் என்னைப் பித்தனுக்கின. தடைசெய்யப்பட்டிருந்த மகாகவி பாரதியின் பாடல்கள் என்னை ஈர்த்தன. இவையே நான் எழுத்துலகில் நுழைவதற்கான இலட்சிய வழிகள்.

கே: "அமரர் கல்கியின் எழுத்துக்கள் என்னைப் பித்தனுக்கின" என்று கூறினீர்கள் அவருக்கும் உங்களுக்குமிடையே இருந்த தொடர்பு பற்றிச்சிறிது சொல்லுங்கள்?

ப: அந்தக் காலத்தில் எழுத்துலகின் முடிசூடா மன்னர் கல்கி அவரைச் சந்தித்துப் பேசுவதே ஒரு பிரமிப்பான காரியமாகும். நான் தொலைவில் இருந்து அவரை மானசீகமாக ரசித்துக் கொண்டிருந்தேனே தவிர, நான் அவரை நெருங்கவில்லை அமுதசுரபி ஆசிரியரான பிறகுதான் 1950ல் எழுத்தாளர் சங்கம் அமைப்பதற்காக அவரோடு தொடர்பு கொண்டேன். அவர் மறையும் 4 ஆண்டுகள் வரை அச்சங்கத்தில் அவருடன் தொண்டாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது மனதில் எழுந்த எண்ணம்தான் 9 ஆண்டுகள் கழித்து 'நந்திபுரத்து நாயகி'யை எழுதத்தூண்டியது. நந்திபுரத்து நாயகி கல்கியின் பெரும் வரலாற்று நாவலான பொன்னியின் செல்வனைத் தொடர்ந்து எழுதப்பட்ட 3 பாகங்கள் கொண்ட வரலாற்று நாவலாகும்.

கே: தமிழகத்திலிருந்து வெளிவருகின்ற வர்த்தகப் பத்திரிகைகளில் மலினமான சிறுகதைகளே பெரும்பாலும் இடம்பெறுகின்றன. இச்சூழ்நிலையிலே தரமான இலக்கியப் பத்திரிகை நடத்தும் தாங்கள் சமகாலச் சிறுகதை பற்றி யாது கருதுகிறீர்கள்?

ப: உங்கள் கேள்வியிலேயே பதில் இருக்கிறது. மலினமான சிறுகதை எழுதுபவர்கள் கூட நல்ல சிறுகதைகளை எழுதக்கூடிய ஆற்றல், உள்ளம் பெற்றவர்களாக இருக்கிருர்கள். அவர்களிடமிருந்து நல்ல எழுத்துக்களைத் தேர்ந்தெடுத்து வெளியிடுவதில்த்தான் தரமான பத்திரிகை ஆசிரியர்களுக்குப் பொறுப்பு மிகுந்திருக்கிறது. கடமையிலிருந்து தவறினுல் மலினமான படைப்புக்களே மிகுந்துவிடும்.

கே: தரமான பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் மட்டுந்தானு சிறுகதைத் துறைக்கான உங்களின் பங்களிப்பு உள்ளது?

ப: இல்லை; நானே ஓர் சிறுகதை எழுத்தாளன்தான். ஏராளமான சிறுகதைகள் எழுதியுள்ளேன். 3 தொகுதிகள் வெளிவந்துள்ளன. "அழகின் நிறம்" அச்சாகிக்கொண்டிருக்கிறது.

கே: இலக்கியச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு ஈழம் வந்துள்ள தாங்கள் இங்குள்ள படைப்புக்கள் பற்றி யாது கருதுகிறீர்கள்?

ப: இலக்கியச் சுற்றுலாவை மேற்கொள்ளுவதற்கு முன்பாகவே இங்குள்ள படைப்புக்களின் தரத்தை நான் அறிவேன். இச்சுற்றுலா மேலும் எழுத்தாளர்களையும் அவர்களின் படைப்புக்களையும் குறித்து அறிந்துகொள்ள எனக்கு வாய்ப்பளிக்கும் என நம்புகிறேன்.

கே: மலேசியா சுற்றுப்பயணம் செய்து வந்ததாக அறிந்தோம். அந்நாட்டின் தற்காலத் தமிழிலக்கியம் பற்றிச் சொல்லுங்கள்.

ப: அங்குள்ள இளைய தலைமுறையினர் அங்குள்ள மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கியத்தைப் படைக்கத் தொடங்கியிருக்கிருர்கள். நல்ல நம்பிக்கை அவர்களுக்கிருக்கிறது. இது எதிர்காலத்தில் நல்ல பயனைத் தரும்.

கே: தமிழக, ஈழ, மலேசியப் படைப்புக்கள் என்று பாகுபடுத்தாமல் ஒட்டுமொத்தமாக தமிழிலக்கியங்கள் என்ற கருத்தை ஆதரிப்பீர்களா?

ப: ஆம், அப்படித்தான் ஆதரிக்க வேண்டும் என்ற கருத்து என்னுள் மேலோங்கி நிற்கிறது. ஆனல், எங்கள் பார்வையில் தமிழகம் மட்டுமே தெரிந்து கொண்டிருப்பதால் மற்ற இரு தமிழ் மக்கள் வதியும் பகுதியின் இலக்கியத்திற்கு முழு நிறைவோடு இடம் கொடுக்க முடியவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்நிலை விரைவில் மாறும்.

கே: தமிழகத்தின் சமகாலக் கவிதைகளின் போக்கு எப்படி இருக்கிறது?

ப: நம்பிக்கை தருவதாக இருக்கிறது. இளம் கவி உள்ளங்கள் துடிப்புடன் மக்கள் பிரச்சினைகளை தங்கள் கவிதைக்குக் களனுகக் கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். கருத்தும் நடையும் கவிச்சிறப்பும் அரும்புவிடத் தொடங்கிவிட்டன.

கே: சுடர் வாயிலாக ஈழத்து எழுத்தாளர், வாசகர்களுக்கு நீங்கள் விடுக்கும் செய்தி என்ன?

ப: வாசகர்கள் முன்பே தமிழகத்தைப் புரிந்துகொண்டிருக்கிருர்கள். ஆனல் தமிழகத்து எழுத்தாளரும் ஈழத்து எழுத்தாளரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு இருநாட்டு வாசகர்கட்கும் தரமான இலக்கியத்தைப் பரிமாறிக்கொள்ளுவதற்கு சுடர் ஒரு பாலமாக அமையவேண்டும் என்பதே என் கருத்து.

## மது மொழிகள்

குடிபழக்கம் அறிஞனையும் சிறிது நேரத்திலே முட்டாளாக்கி பின்னர் விலங்காக மாற்றி விடுகிறது

— ஷேக்ஸ்பியர்.

குற்றங்கள் பிறப்பதற்கு முக்கிய காரணங்களாக இருப்பவை குடியும் அறியாமையும்

— ஆவ்வரி.

சாத்தான் நேரில் போக முடியாத இடங்களுக்கு மதுவை அனுப்பி வைக்கிருன்.

— ஜாப்பாஸ்.

மனிதன் குடிக்கிருன், பின்னர் குடி மனிதனைக் குடிக்கிறது

— ஜாப்பாஸ்.

மது மயக்கம் என்பது தானுகத் தேடிக் கொள்ளும் பைத்தியமே தவிர வேருென்றுமல்ல.

— ஷெனிக்கா.

மது உள்ளே இறங்கியதும் மதி வெளியேறி விடுகிறது.

— பிளினி.

மது மனிதனைக் கடலைவிட ஆழ்த்தி விடுகிறது.

— தோமஸ்.

தகவல்: [illegible]
காரைநகர்

# அரி பதில்கள்

**ஆ. சரோஜினிதேவி**
139, டி வாஸ் லேன்
கொழும்பு-14.

**கே:** அரி அண்ணா! கண்ட கண்ட பத்திரிகை சஞ்சிகை எல்லாம் தம் விலையை விஷம் போல் உயர்த்தியுள்ள இந்த வேளையிலும் சுடர் இன்னும் இத்தனை பொலிவான பக்கங்களுடனும் 2 ரூபாய்க்கு விற்பனைக்கு நிற்கிறதே............ஏன் அண்ணா?

**ப:** ஈழத்தின் மிக விலை குறைந்த தரமான திங்களிதழ் சுடர் ஒன்றேதான் என்ற பெருமை இருக்க வேண்டாமோ?

**செல்வி - கலைமாமணி,**
காரைநகர்,

**கே;** நடைபெறவிருக்கும் விகிதாசார தேர்தலால் தமிழர்களுக்கு ஏதாவது நன்மையுண்டா?

**ப:** எந்த விதமான தேர்தல் நடந்தாலும் நம்மைப் பொறுத்தவரை நன்மை எதுவும் நேர்ந்து விடாது.

**கே;** 'எசல பெரஹரா' விற்காக ஜனாதிபதி நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபா ஒதுக்கீடு என பத்திரிகைச் செய்திமூலம் அறிந்தேன். எசல பெரஹரா'வுக்கு 10 இலட்சம் ரூபா தேவைதானா?

**ப:** இதுபற்றி எனக்கென்ன புரியும்? இந்த பத்து இலட்ச விவகாரங்களை எல்லாம் விட்டுவிட்டு நம் இலட்சிய விவகாரங்களில் ஈடுபடுங்கள்.

**கே:** யாழ்ப்பாணத்திலுள்ள சிலைகளுக்கு வன்செயலின் போது வந்த நிலை அண்மையில் வவுனியாவில் நிறுவப்பட்ட தமிழரசன் பண்டார வன்னியனின் சிலைக்கு வராமலிருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

**ப;** சிலையை சுற்றி இரவு பகல் கண் துங்காது காவல் இருக்கவேண்டும். முடியுமா உங்களால்.

**கே:** திறந்த வெளிப் பல்கலைக் கழகத்திற்கு 10 ஆயிரம் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவிருப்பதாக வானொலி செய்தி மூலம் அறிந்தேன். இதில் சுமார் எத்தனை தமிழ் மாணவர்கள் இடம் பெறுவார்கள்?

**ப:** இந்த ஜோசியக்கலை இருக்கிறதே அது எனக்கு சுத்த சூனியம் பாருங்கள். யாராவது ஒரு சோதிட விற்பன்னர்களை நாடினால் பயன் கிடைக்கலாம்.

**செல்வி. விமலா நாகராஜா**
யாழ்ப்பாணம்.

**கே:** எந்த ஒரு தேர்தலிலும் கூட்டணியுடன் சேர்வது தான் விடுதலை அணியின் முடிந்த முடிவு'' என எண்ணியிருப்போர்க்கு மாறாக இம்முறை தேர்தல் நடைபெறுமென தாங்கள் எதிர்பார்க்கின்றீர்களா?

**ப:** ஆம் தேர்தலை நம்பினால் நமக்கேது விடிவு?

**எஸ். நாகராஜா**
செக்கடிப்புலவு,
வவுனியா.

**கே:** வன்னிவள நாட்டையாண்ட பண்டார வன்னியனை ஸ்ரீலங்காவினர் தங்கள் மன்னன் என்கிறார்களே.. ...?

**ப:** வரலாறு தெரியாதவர்களின் புலம்பல்கள் இவை. இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் தமிழ்த்தலைவர் அமிர்தலிங்கம் அவர்களைக்கூட 'அமிர்த சேகரா' என இவர்கள் வரலாறு எழுதினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையே.

**கே:** பண்டார வன்னியன் சிலை திறப்பு விழா வன்னிநகர் வளர்ச்சிக்கு ஊன்று கோலாக அமையுமா......?

**ப:** இல்லை 'சரித்திரப் புரட்டர்களுக்கு' சவாலாக அமையும்.

**சிவமணி மாணிக்கவாசகர்,**
காரைநகர்.

**கே:** நெல்லியடி சம்பவத்தை தொடர்ந்து தார்மீக ஆட்சியினரின் படையினர் அடிக்கடி அப்பாவி மக்களை துன்புறுத்தி வருகிறார்கள். எப்போதுதான் சுதந்திரமாக நடமாட முடியும்?

**ப:** ஆக்கிரமிக்கப்பட்ட நம் மண்ணில் இருந்து அவர்கள் வெளியேறிய பின்பு.

**கே:** சேலை கட்ட வேண்டிய கன்னியர் சிலர் காளையர்களைப் போல 'பெல்ஸ்' அணிகிறார்களே இவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ப:** சாரி உற்பத்தியாளர்களுக்கு உபத்திரவம் கொடுக்கும் தலைவர்கள்.

**கே:** எமது வட்டுக்கோட்டை பிரதிநிதி திரு. தா. திருநாவுக்கரசு அவர்களின் இடத்திற்கு யாரை நியமிப்பார்கள்?

**ப:** அண்ணா அமிரிடம் கேட்டால் இலகுவாக பதில் கிடைக்கும்.

**கலைராஜன்,**
வவுனிநகர்.

**கே:** எத்தனைபேர் கேள்வி கேட்டாலும் சலிக்காமல் பதில் தருகிறீர்களே, எம்மிடம் கேள்வி கேட்பதென்றால் என்ன கேள்வி கேட்பீர்கள்..?

**ப:** ஒரு நாளைக்கு எத்தனை தடவைகள் மூச்சு விடுகிறீர்கள்—? பதில் தரமுடியுமா?

**கே:** தார்மீக அரசின் தலைவர் ஜனாதிபதி தேர்தலை முதலில் வைப்பதற்கு காரணமென்ன......?

**ப:** ஒன்று: பாராளுமன்றத் தேர்தல் முதல் நடந்தால் ஸ்ரீல. சு. கட்சியே அதிகாரத்துக்கு வரும். அப்படி வந்தால் தன்னை எதிர்த்துப் போட்டியிடும் தகுதியை ஸ்ரீமா அம்மையார் பெற்று விடுவார் என்ற எண்ணம்.

**மற்றது:** தற்போது ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் தனக்கே வெற்றி பெறும் வாய்ப்புண்டு — வெற்றி பெற்றால் ஸ்ரீல. சு. கட்சி ஆட்சி அமைக்க முடியாதபடி தன் அதிகாரத்தை பயன்படுத்தி பாராளுமன்றத்தை கலைத்துவிடலாம் என்ற நினைப்பு.

**த. சிவநாதன்,**
செட்டிக்குளம்.

**கே:** கூட்டணித் தலைவர்களை தார்மீக அரசுடன் சேர அழைப்பு விடுத்த தேவானவை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**ப:** அரசியல் ஆற்றில் முச்சுத்திணறி அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் தேவாவுக்கு துணை தேவைப்படுகிறது.

**கே:** காலியில் இடம் பெற்ற சம்பவங்கள் எதனை மீண்டும் நினைவு படுத்திகிறதென்று சற்று விளக்கமாக கூறுவீர்களா அரி அண்ணரே?

**ப:** ஒவ்வொரு ஆவணி மாதங்களிலும் இரத்தக்காட்டேறிகளுக்கு உயிர்ப்பலி தேவைப்படுகிறது.

**எம். எஸ். வெண்தூ,**
செடிக்குளம்.

**கே:** அதி உத்தம மாண்பு மிகு- கௌரவ ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன அவர்களிடம் ஸ்றிமா அம்மையார் மன்னிப்பு கேட்பாரா....

**ப:** இல்லை. மன்னிக்கும் மனப்பான்மை தன்னிடம் உண்டு என்பதை வெளிப்படையாக காட்டிக் கொள்ளவே ஜே. ஆர். இப்படி நாடகமாடுகிறார்.

**கனக. பிரதீபன்,**
கொக்குவில் மேற்கு.

**கே:** ஒரு இயக்கம் ஒரு பத்திரிகை ஒரு கட்சி என்றிருந்த தமிழ் மக்களின் வாழ்வில் பல இயக்கங்கள் பல பத்திரிகைகள் பல கட்சிகள் உருவாகிவிட்டதை எண்ணி கவலை அடைகின்றேன் இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன கூறுங்களேன்?

**ப:** கவலைப்படும் உங்களைப் பார்க்கும்போது எனக்கும் கவலையாகத்தான் இருக்கிறது.

**செல்வி. ஜெயவாணி**
திருகோணமலை.

**கே:** ஈழத்தின் மற்றொரு சஞ்சிகையான 'மல்லிகை' பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

**ப:** இலக்கிய மணம் பரப்பும் 'சிவப்புமல்லிகை'.

**கே:** திரு. டொமினிக் ஜீவா அவர்களைப்பற்றி......?

**ப:** அவரின் பெயரில் மட்டுமல்ல, எழுத்துக்களில் கூட 'ஜீவன்' இருக்கும்.

**பி. அருளானந்தம்.**
கொட்டாஞ்சேனை

**கே:** திரு மைத்திரி ஜனாதிபதியாக வந்தால் தமிழ் மக்களுக்கு விடிவு கிடைக்குமாமே!

**ப:** அருளானந்தர்! பெட்டைக் கோழி கூவி என்றாவது பொழுது விடிந்ததுண்டா?

**கே:** அமைச்சர் செ இராசதுரைக்கு எதிர்வரும் பொதுத் தேர்தலில் மட்டுநகரிலா மலையகத்திலா இடம் கிடைக்கப் போகிறது?

**ப:** பிராந்திய அமைச்சர் இனி எந்தப் பிராந்தியத்தில் நின்றாலும் எம். பி. யாக வர முடியாது. தனக்குத்தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட துரதிர்ஷ்டசாலி இவர்.

**கே:** மட்டுநகரின் முடிசூடா மன்னன் என்று இனி யாரை அழைக்கலாம?

**ப:** மட்டுநகரின் பட்டத்துக்குரிய இளவரசராக இருக்கும கவிஞர் காசி ஆனந்தனை இனி மட்டக்களப்பை 'ஆளப்' போகும் முடிசூடா மன்னன்.

**எம். இராமநாதன்**
வாழைச்சேனை.

**கே:** தாமும் இராசதுரையும், தொண்டமானும சேர்ந்து நாட்டை ஆண்டு வருவதாகவும், த. வி. கூ. வும் தாம் விரும்புவதுபோல் ஐ. தே. க. அரசில் சேர்ந்து ஆளலாம் எனவும் அமைச்சர் தேவநாயகம கூறி வருகிறாரே?

**ப:** 'செக்' குக்கும் சிவலிங்கத்துக்கும் வித்தியாசம் தெரியாதபடி மனிதர் ஏதோ வயது போன காலத்தில புலம்பி வருகிறார். இதையெல்லாம் நாம் பொருட்படுத்தலாமா?

**கே:** தங்கள் பொழுது போக்குகள் என்னவென்பதை அறிய விரும்புகிறேன் சொல்வீர்களா?

**ப:** கட்டிலில் சாய்ந்து, நன்றாக நீட்டி நிமிர்ந்து கொண்டு கண்களை மூடி 'ஹாயாக' நித்திரை செய்வது இப்படித்தான் எனது இரவுப் பொழுது கழிகிறது. பகலில்... அந்த வயிற்றெரிச்சலை ஏன்

ஐயா கேட்கிறீர்கள்? கடுகதியாய் விரையும் கதிரவனை தடுக்க கடிவாளம் எதுவும் கிடைக்காதா என ஏங்கித் தவிக்கிறேன்.

கே: ஆண்டவன் உங்கள் முன் தோன்றினால் நீங்கள் என்ன வரம் கேட்பீர்கள்!

ப: உண்மையிலேயே நான் 'அரி' யாக மாறிவிடவேண்டும் என்று. நாட்டில் வாழ்வதைவிட காட்டில் உலாவுவதுமேல்.

பி. ராம்குமார்
கொழும்பு-13.

கே: தமிழக அரசியல் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன அண்ணா?

ப: 'ஜெயலலிதா அலை' பலமாக வீசுகிறதாம். எம். ஜி. ஆருக்கு ஒரு அரசியல் நாயகி இல்லாக் குறையும் தீர்ந்திருக்கிறது. தமிழக அரசியல் இனி மிக விறுவிறுப்பாகவே இருக்கும்.

கே: சினிமா தியேட்டர் பக்கம் நீங்கள் தலைகாட்டுவதில்லையா?

ப: ஏன் இல்லை. தரமான படங்கள் ஓடும் தியேட்டருக்குள் என் தலையையும் காணலாமே!

கே: நீங்கள் ரசித்து சுவைத்த படம் எதுவென கூறமுடியுமா?

ப: தில்லானாமோகனாம்பாள்.

கே: செ. இராசதுரையைப் பற்றி நீங்கள் என்னதான் நினைக்கிறீர்கள்?

ப: ஏன், அவருக்கு என்ன நடந்தது? எதை வாங்குவதானாலும் கூட அதில் ஒளிவு மறைவு வஞ்சகம் ஏதும் இல்லாத 'நல்ல' மனிதராச்சே! தன் குடும்பத்தினரையும் மிக நன்றாக கட்டிக்காத்து கவனித்து வரும் பிழைக்கத் தெரிந்த மனிதர்.

எம். வேணுகோபாலன்
வெள்ளவத்தை.

கே: அண்மையில் யாழ் நகரில் நடந்த ஸ்ரீல. சு. கட்சிக் கூட்டத்தில், தாம் ஆட்சிக்கு வந்தால் பண்டா — செல்வா ஒப்பந்தத்தில் இணங்கப்பட்ட பிரதேச சபைகளை வழங்குவதாக பழைய அமைச்சரான கே. பி. இரத்நாயகா புலம்பியது பற்றி........?

ப: காலம் கடந்தபின் பிறந்த ஞானோதயம் இனி யாருக்கு வேண்டும் இந்த பிரதேச சபைகள்?

கே: திராவிடக் கழக தலைவர் திரு. வீரமணி அவர்களை காட்டுமிராண்டித் தனமாக தாக்கி இருக்கிறார்களே!

ப: பெரியாரின் சீடர் திரு. வீரமணி அவர்களை கோழைத்தனமாக தாக்கியவர்கள் நிச்சயம் அரசியல் பேடிகளாகத்தான் இருக்க வேண்டும் இக்கொடுஞ்செயலின் பின்னணியில் இருந்தவர்கள் கோவில் பூசகர்களாம். அதனால் தான். சைக்கிள் செயின்களாலும் கற்களாலும் பூஜையும் அபிஷேகமும் நடத்தியிருக்கிறார்களோ?

எஸ். பாலச்சந்திரன்
கொழும்பு-13.

கே: இத்தாலிய விமானத்தை கடத்தியவர் தமிழராக இருந்திருந்தால் நாடு கடத்தப்படுவாரா?

ப: ஆம்! பனாகொடை இராணுவ முகாமில் வைத்து அணு அணுவாக 'கடத்தி' இருப்பார்கள்.

---

மணிக்கதை

## வெட்கம் கெட்டவர்கள்...

— தமிழ்ப்பித்தன் —

அந்தக் காட்சி என்பார்வையைக் கட்டி நிறுத்தியது. அருகேயிருந்த பதினேழு வயது பாடசாலை மாணவியர் இருவரும் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்

அவன் இன்னமும் அவளை இறுக அணைத்துக் கொண்டிருந்தான். அவளோ சிறிது நேரம் நாணிக் கோணி விலகப் பார்த்து பின்னர் அந்த எதிர்ப்பு தேய்ந்து போய் அவனுடன் ஐக்கியப்பட்டு ....

சீ... வெட்கங் கெட்டவர்கள்

கடற்கரையில்...வள்ளத்தின் மறைவில்...ஓ...அறையில் நடக்க வேண்டியவை எல்லாம் அம்பலத்தில்......

கண்களை மூடிக் கொள்ளலாமா அல்லது எழுந்து போய் விடலாமா என்று ஒரு கணம் எண்ணிய போதும், நப்பாசை ஆரைத்தான் விட்டது...

எனது உடலிலும் சூடேறியது... உடல் சிலிர்க்க, நாவரண்டு .. பெருமூச்சு வெளிப்பட.. இன்னமும் என்னால் பார்வையைத் திருப்பமுடியவில்லை. வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

இப்போது அந்த ஆடவன் அவளைஇன்னும் அருகே இழுத்து அவளது வெண்மைக் கழுத்தில் தன் இதழ்களைப் பதித்தான். கைகள் அவளது முதுகுப் புறத்தை வருடிக் கொண்டிருந்தது. அவளோ அவனுக்கு வசதியாகத் திரும்பி அவன் முகத்தோடு முத்தாடி...... எமக்கு முதுகுப் புறம்தான் தெரிந்தது.

அந்த நெருக்கமான தழுவலில் அவளது ஆடை சற்று மேலுயர்ந்து... அந்த அழகான கால்கள் கண்களுக்கு விருந்தாகின.

இதற்கு மேலும் என்னால் பார்த்துக் கொண்டிருக்கமுடியவில்லை. (என்ன கண்டறியாத படங்கள்எடுக்கிறார்கள்...இப்படியெல்லாம் காட்சிகளை அமைத்து விட்டால் படம் ஓகோ என்று ஓடிவிடும் என்று எண்ணமோ? என்று சலித்துக்கொண்டு பக்கவாட்டில் திரும்பிப் பார்க்கையில் அருகே அமர்ந்திருந்த பாடசாலை மாணவி ஒருத்தியின் மறுபக்கம் அமர்ந்திருந்தவன்- அவளுக்கு முன்னர் பின்னர் தெரியதாவன் என்று நினைக்கிறேன்—அங்கே திரையில் நடப்பதின் தொடர்ச்சியாக... அவளும் உணர்ச்சியின் ஆட்கொளலில் வாளாவிருக்க...சீ அதற்கு மேல் நான் இருக்கவில்லை. பாதிப் படத்துடன் வெளியேறி விட்டேன்.

(கற்பனையே)

# கவிச்சரங்கள்

## கண்ணீர்த் துளிகள்

— கல்வியூர் விஜயபாரதி —

உழைக்கும் வர்க்கம் உன்னத
ஈழத்திலே பெறுகின்ற
விலைமதிப்புடைய
சிறப்பு இலாபம்
கண்ணீர்த்துளிகள் !
மண் கொத்தி - இங்கே
நிலம் புரட்டி மாடாய்
மழையை நம்பி
பயிர் விளைத்து
உலகின் பசிபோக்கும்
உழவர் பெறும் அதி
உன்னத முதற்பரிசு
ஒரு துளிக்கண்ணீர் !
இராப்பகலாய்
எந்நாளும் நாட்டுக்கு
ஓடாய் உழைக்கும்
ஆணும் பெண்ணும் பெறும்
அரிய பரிசு இதயத்தின்
கண்ணீர்த்துளிகள் !

## கண்டக்டர் (நடாத்துனர்)

—தேசிகன் மண்டூர்—

ஏறென்பான் இறங்கென்பான்
இடமில்லை என்று சொல்வான்
பாரென்பான் கை விரித்து
பத்துச்சதம் இல்லை என்பான்.

## இருமனிதர்

-வேலணையூர் சு. கருணாநிதி-

பரந்த
ஒரு சமூகத்திற்காக
தனியொருவன்
தனது
சுகபோகத்தைத் துறந்து
மரணத்தை
வர வேற்பானாயின்
அவன் 'தியாகி' யாகிறான்

தனியொருவன்
தனது
சுகபோகத்திற்காக
பரந்த வொரு
சமூகத்தை அழிப்பானாயின்
அவன் 'துரோகி' யாகிறான்.

## புதுயுகம்

-பன்விலை குறிஞ்சிநாடன்-

உழைத்து
உயர்த்தும் கரங்கள்
உயர்ந்த கரங்களின்
தாக்குதலால்
வலுவிழக்க
இன்றோர்
பலமிழந்த
கரம் பற்றும் ;
பற்றிய கரங்கள்
பலம் பெற்று
மேலுயர,
அங்கோர்
புதுயுகம் பூக்கும்.

## மூலதனம் !

—திருமலை இரா. செல்வம்—

எங்கள் இயலாமையை
மூலதனமாக்கி
அற்ப சுகத்திற்காக
அலையும் உலுத்தர்களே !
கந்தல் ஆடைகளின்
களங்கமற்ற அழகை
கசக்கி எறிய
அலையும் ஓநாய்களே !
கால் வயிற்றுக்
கஞ்சிக்கு வழி இல்லாத
கபோதிகள் நாங்கள்
வறுமைத்தணலில்
கால்கள் கொப்பளிக்க
நடப்பவர் நாங்கள் !
நிச்சயமாய் ஒரு நாள்
எங்கள் "பசி" தீரும் !
அதுவரை நீங்கள் — சமூகத்தில்
தூசுபடாத தூய்மையான
புண்ணியவான்கள் !

## எப்படிப் பொங்கும் உலை?

— குமார் தனபால் —

பத்து ரூபா அரிசி விலை!
பற்றுக்குறையே எமது நிலை!
நாட்டில் எல்லாம் விலை!
கடனுக்கோ வழியும் இலை!
இந்த நிலை.....................
நீடித்தால்...................
எப்படிப் பொங்கும் எமது உலை! ?

# உள்ளதை ஜன்னல் சினக்கும்

-பொ. சண்முகநாதன்-



ஊரின் ஒதுக்குப் புறத்தில் அந்த நவநாகரிகமான தனி வீடு அமைந்திருந்தது. எல்லா வசதிகளும் பொருந்திய அழகிய வீடு இப்படித் தனித்திருப்பதற்குக் காரணம் புறக்கணிப்பா? முன்னேடியா அதுதான் சொல்லத் தெரியவில்லை.

அந்த வீட்டை நோக்கி அமுதா நடந்து கொண்டிருக்கிருள். அவளது நடையில் எப்படியும் இருட்டுவதற்கிடையில் வீட்டை அடைந்து விட வேண்டும் என்ற அவசர்ம் காணப்படுகிறது.

அங்கே இந்நேரம் அவளது தாயோ தகப்பனே இருக்கமாட்டார்கள்...... அவர்கள் மாலையில் ஒரு திருமண வீட்டுக்குச் சென்றிருப்பார்கள். வரநேரமாகும் என்று காலையில் அவள் அலுவலகம் புறப்படுவதற்கு முன் சொல்லியிருந்தார்கள். மாலை ஐந்து மணிக்கெல்லாம் தனது வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டையும் கேற்றையும் பூட்டிக் கொண்டு போயிருப்பாள். எல்லாவற்றுக்கும் மாற்றுச் சாவிகள் அவளது கைப்பையில் இருக்கின்றன.

அவளது அண்ணனுக்குத் தான் எந்தவித கட்டுப்பாடுகளோ பொறுப்புக்களோ கிடையாதே! அவன் வீடு திரும்புவதற்கும் ஒரு நேர காலம் கிடையாது.

கேற்றை நெருங்கிய அமுதா அதிலுள்ள பூட்டைத் திறந்து, சாவியுடன் சேர்ந்த பூட்டை எடுத்துக் கொண்டு வீட்டின் வாசல் கதவடைந்தாள். கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவள் கதவை மீண்டும் உட்புறம் தாளிட மறந்தவளாய், கதவை அடுத்துள்ள யன்னலைத் திறக்கப்போனுள்.

அச்சமயம் 'படீர்' என்று கதவு அடித்துச் சாத்தப்படும் ஓசை கேட்டுத் திடுக்கிற்றுத் திரும்பினுள்.

அங்கே, மூடிய கதவில் சாய்ந்தவாறு அவன் நின்றுன். அவன் இப்பொழுது சில நாட்களாக அவளைச் சுற்றிக் கொண்டு திரிபவன் — பெயர் காசிநாதன். நேரத்துக்கு ஓர் அலங்காரம்... நாளுக்கு ஒரு சாதனை... எல்லாம் அவளுக்காகத்தான்......

இன்று அவளறியாமல் அவளைப் பின்தொடர்ந்து இங்கு வந்திருக்கிருன் என்பதைப் புரிந்துகொள்ள அவளுக்கு அதிகநேரம் செல்லவில்லை.

அமுதாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சில கணங்கள் அவள் திகைத்துத் தடுமாறிவிட்டாள். வீட்டுக்குள் நுழைந்ததும் கதவைத் தாழ்ப்பாள் போட மறந்த தன் தவறை அவள் அப்பொழுதுதான் உணர்ந்தாள்.



இனி அந்த முரடன் அவளை விட்டு வைக்கப்போவதில்லை. அந்த வெறியன் அவளை நிச்சயம் கெடுத்து விட்டுத்தான் போவான். அவள் சிங்கத்தின் கூட்டில் அகப்பட்ட புள்ளிமான் போல் தவித்தாள்.

அடுத்தகணம் அவள் என்ன நினைத்துக் கொண்டாளோ "ஓ... நீங்களா?" என்று புதுமையாக அவனை நோக்கிக் கேட்டாள்.

அவளது அந்தக் கேள்வியில் தொக்கி நின்றது கேலியா அல்லது ஒருவித உரிமை கலந்த பாசமா என்பதை உடனடியாக அவனுல் புரிந்து கொள்ள முடியவில்லை.

காசிநாதன் எதுவுமே பேச விரும்பாதவன் போல உடனடியாக செயலில் இறங்கி விட வேண்டும் என்ற துடிப்புடன் வந்தவன் வீணுகப் பேச்சை வளர்த்துக் கொண்டிருந்தால் எங்கே தான் வந்த நோக்கம் அவமாய்ப் போய் விட்டால்...?

அமுதாவே அடுத்த கேள்வியையும் கேட்டாள் "என்ன மிஸ்டர், நான் கேட்கிறேன், நீங்கள் பேசாமல் இருக்கிறீர்கள்?"

காசிநாதனுக்கு அவளின் அந்த வரவேற்பும் இங்கிதமான பேச்சும் புதுமையாகவும் தர்மசங்கடமாகவும் இருந்தது. தான் அத்துமீறி அவளைத் தொடுவதற்கு அவை இடைஞ்சலா இருப்பதுபோல் தோன்றியது.

அவன் தொடர்ந்து மௌனம் சாதித்தான். அணைக்கத் துடித்த அவனின் கைகள் இப்போது இலேசாக நடுங்குவதை அவள் அவதானித்தாள்.

மீண்டும் அமுதாவே கேட்டாள். "இப்படித் திருட்டுத்தனமாக பயந்து நடுங்கிக் கொண்டு முரட்டுத்தனத்தைப் பிரயோகித்து அனுபவிப்பதற்குப் பெயர் இன்பமாகுமா?"

காசிநாதன் இப்பொழுது தான் முதன் முதலாக மெதுவாக வாயைத் திறந்தான்- "நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?"

"ஐ மீன்" என்று ஆங்கிலத்தில் ஆரம்பித்தவள் எங்கே 'அது' அவனுக்குப் புரியுமோ புரியாதோ என்ற எண்ணத்தில் "பெண்ணின் சம்மதத்தையும் பெற்று, தான் அனுபவிப்பதை அவளுக்கும் அளிப்பதுதான் உண்மையான இன்பம் என்பதைத்தான் சொல்ல வந்தேன்" என்று பச்சையாகவே சொல்லித் தீர்த்தாள்.

காசிநாதன் தனக்குள் பேசிக்கொள்வது போல் சொல்லிக்கொண்டான் "அவர்களின் சம்மதத்தை பெற முடியாதே—அவர்கள் சம்மதிக்க மாட்டார்களே..."

"வை நொட்?" எனத் தொடங்கியவள் மீண்டும் தனது தவறை உணர்த்தவள் போல் "பாலியல் வேட்கை என்பது ஒரு பருவகால வெளிப்பாடு இவை ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான உணர்வுகள். ஆனால் ஆண்கள் இதை வெளிக்காட்டிக்கொள்கிறார்கள். பெண்கள் அப்படியல்ல—இதுதான் வேறுபாடு. அதுவும் சில ஒழுக்கக் கட்டுப்பாடுகளுக்குப் பயந்தே அவர்கள் இந்த உணர்வுகளைத் தங்களுக்குள் அடக்கிக்கொண்டு அவதிப்படுகிறார்கள்..."

"நீங்கள் கூட உங்களுக்கும் கூட..."

அவள் சிரித்துவிட்டுத் தொடர்ந்து சொன்னாள். "ஏன் என்னைச் சாதாரண மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு பிராணியாக நீங்கள் நினைக்கிறீர்களா?"

இப்படிக் கேட்டவள் அவனை மிகவும் நெருங்கி மிக்க உரிமையோடு பேசுவது போல் சொன்னாள். "உண்மையை ஒளிவுமறைவின்றிச் சொல்வதாயிருந்தால் நான் கூட இந்தப் பருவகால உணர்ச்சிகளால் அவதிப்படுபவள்தான். என்னையொத்த பெண்கள் சிநேகிதிகள் எல்லாரும் திருமணம் செய்துகொண்டு 'சுகம்' அனுபவித்துக்கொண்டு குதூகலமாக இருப்பதை நினைக்கும்போது ..எனக்குப் பேசி வருகின்ற ஆண்களை எல்லாம் அம்மா மாறி அப்பா எனது உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமலே நிராகரித்துக்கொண்டிருக்கிறார்கள். காரணம் வேறு சொல்லுகிறார்கள்—இவர்களது ஸ்டேட்டஸ் காணாதாம். தகுதி குறைந்த இடமாம். அவர்கள் ஸ்டேட்டஸ் என்றும் தகுதி என்றும் எதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ?"

அவள் சொல்வதையே மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த காசிநாதன் பின்னர் மேலும் சில கணங்கள் அவள் சொன்னவைகளையே மனதுக்குள் அமைதியாக அசை போட்டுக்கொண்டிருந்து விட்டுக் கேட்டான்.

"மொத்தத்தில் உங்களுக்கு ஓர் ஆண் துணை வேண்டும். அவன் உங்கள் தகுதிக்கு முற்றிலும் பொருத்தமில்லாத என் போன்றவனாகக்கூட இருக்கலாம். அதைத்தானே சொல்ல வருகிறீர்கள்..."

இம்மாத

## பரிசுக் கதை

"யேஸ்... றியலி...யூ ஆர் கொரக்ட்..." என்றவள் ஏதோ மகிழ்ச்சிக் கடலில் மிதப்பது போல் சில விநாடிகள் கண்களை மூடி அதை அனுபவிப்பதுபோற் காணப்பட்டாள்.

அமுதா கண்களைத் திறந்து பார்த்தபோது அவனை அங்கே காணவில்லை. ஓசைப்படாமல் கதவைத்திறந்து கொண்டு சொல்லாமலே போய் விட்டான்,

வெளியே வந்து பார்த்தாள்: தூரத்தில் அவளின் அப்பா அம்மா இருவரும் வந்துகொண்டிருந்தனர். அவளுக்குத்தான் அவனிடமிருந்து தப்புவதற்காக நடந்துகொண்ட முறைகளை நினைக்கும்போது வெட்கமாக இருந்தது.

(யாவும் கற்பனை)

# ஆழம் பார்த்த மேதை

ஒரு பெரிய ஆற்றின் ஆழத்தை அளந்து அறியும்படி ஒரு கணித மேதையிடம் பணிக்கப்பட்டது. அவர் அளப்பதற்குப் புறப்பட்டார். விசாலமானபெரிய ஆறு, அதை அளப்பதென்றால் மிகச் சிரமம்.

கணித மேதை 'எப்படி அளப்பது..... எத்தனை நாட்களெடுக்கும் என யோசிக்கலானார். நீடித்த சிந்தனையின் பின் ஒரு யுக்தி பிறந்தது. பெரிய தடியொன்றை எடுத்து ஆற்றின் பல் வேறுபட்ட பகுதிகளில் அங்கொன்றும் இங்கொன்றுயாக தடிகளை ஊன்றி அளப்பதற்கு மரக்கலத்தில் தனது பயணத்தை மேற்கொண்டார். ஆற்றின் நடு, கரை போன்ற பல அளவுகளைக் கொணர்ந்தார். அவை இரண்டடி, ஆறடி, ஓரடி ஆகிய அளவுகளிலிருந்தன. யாவற்றையும் கூட்டிச் சராசரி கண்டு பணிக்கப்பட்டவருக்கு ஆற்றின் ஆழம் மூன்றடி எனத் தனது கணிப்பைக் கூறினார். (மொத்தம் பன்னிரண்டு அடி அளந்த நிலையங்கள் நான்கு.)

கணித மேதையும் கட்டளை பணித்தவரும் அவரது சகாக்களும் குளிப்பதற்காக ஆற்றில் இறங்கலாயினர். முதலில் கணித மேதை இறங்கினார். அவர் இறங்கிய இடத்தின் ஆழம் ஆறடி. பாவம், இறங்கியவர் மீண்டும் வெளியே வரவில்லை.

—சு. கருணாநிதி—

அறிமுகம்:

# பல புனைபெயர்களில் ஒரு கவிஞர்

## O அ. கௌரிதாசன். O



ஈழமணித் திருநாட்டில் இன்பத் தமிழ் பாடும் கலைஞர்கள் செறிந்துவிட்ட கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஆலங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட அம்பலவாணர் - கௌதரிதாசன் என்பவர் முன்னோடியாகத் திகழும் ஒரு கவிஞர்.

மகருகிராம (மாகாமார்) அஞ்சல் அதிபராக கடமை புரியும் இவர், ஆலங்கேணி "கேணிச்சுடர்" சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணிபுரிகின்றார். இவர் பல கவிதைப் போட்டிகளிலும் பங்குகொண்டு பலரது பாராட்டையும் பரிசையும் பெற்றுள்ளார். எனினும். "தேசிய இளைஞர் சேவை மன்றம்" மாவட்ட அடிப்படையில் நடாத்திய கவிதைப் போட்டி (1981) யில் பரிசு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

"ஆலையூர்த்தாசன்", "காஹூர்க்கவிஞன்' ஆகிய பெயர்களிலும் கவிதைகளை எழுதி வருகின்றார்- இவரது கவிதைகளில் பாட்டாளிகளின் வாழ்வு முறை. சமூக நெருடல்கள், காதல் என்பன கருப்பொருளாக அமைகிறது. "முத்திரை" பெறும் கவிதையிலே,

"உப்பும் சோறுமே—எங்கள்
அட்டமுள்ள உணவு!
ஓலைப்பாய் தான் எங்கள்
ஒப்பற்ற பஞ்சணை!
பருத்தி சேர்ந்த கதருடையே, எங்கள்
பட்டாடை!
ஏங்கிப் பெருமூச்சு விடுவதே, எங்கள்
அனுபவிப்பு
இதனுற்ருன்.
எங்களை உறிஞ்சி ஏப்பம்விடும் முதலாளிகள்
எங்களுக்கு,
ஏழைகள் என்று 'முத்திரை'
பொறித்துள்ளார்கள்?"

* * * *

"ஆளும் அரசாங்கம்; அடக்கும் நிலைமாறி
வாழும் மக்களெலாம் வளம் கொண்டு
வாழ்ந்திடவும்", என்றும்,
"பாடுபடும் பாட்டாளி வாழ்வுக்காக'—சற்றும்
பாடுபடா இருக்கின்றோர் வீழ்வுக்காக!
நாடுஅது நல்லநிலை அடைதற்காக!—வளர்
நல்லிளைஞர் தலையாய கடமைக்காக!"—

என்று இளைஞர்களை விழித்து தனது சூடான சிந்தனையை வெளிக்காட்டுகின்றார்.

* * * *

நல்லவராய் நாளெல்லாம் வேஷமிட்டு வாழும் கொடியவர்களையும் அணுகியிருக்கின்ருர்.

"வெளியுலகப் பார்வைக்கு
வெள்ளைமனம் கொண்டவர்தான்,
ஒளிஅணைந்த பின்னர்தான்
ஒத்திகைகள், அரங்கேற்றம்!
களிகொள்வார்! விலைமாதைக்;
கட்டித் தழுவிடுவார்!
விழிகாட்டும் உருபொய்யே,
வேஷம்! உணர்ந்திடுங்கள்!"

* * * *

சீதன அரக்கனின் கொடுமையால் வாளாவெட்டியாக இருந்து கண்ணீர்விடும் ஏழைக் கன்னியர்களை "ஏக்கம்" என்னும் கவிதையிலே படம் பிடித்துள்ளார் இப்படி—

"நாங்கள்,
கல்யாணச் சந்தையிலே
விலை போகாத சரக்குகள்!
தனமுள்ளவர்களின்,
கழுகுப் பார்வைக்குத் தென்படும்
அழகு தேவதைகள்!
ஆலயத்திலே அர்ச்சிக்கப்படாத
தாளம்பூக்கள்!
என்ருே ஒருநாள்,
சீதன விலங்கொடிந்தால்
எங்கள் கழுத்துக்களும்
மணமாலை சுமக்கும்!"

என்று கூறும் கவிஞர் சமூகக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து போலி வரட்டுக் கௌரவங்களையும் சாடி நிற்கின்ருர்.

"புரட்சிஓர் பொழுதில் பூமியிலே எழுகையிலே
வரட்டுப் புகழ்கொண்டோர் வாழ்வு தொடராமல்
இருப்பதற்கே சீர்திருத்தம் இயற்றிடுவோம்",

—என்று கூறுவதோடு நையாண்டியாக, நகைச்சுவையாக நமது சிந்தனையை தூண்டிவிடுகிருர்.

"நன்றி உணர்வினிலே
நம்மைவிட நாய்மேலாம்!
பன்றியை நாம் மிஞ்சிவிட்டோம்
பாலர்களைப் பெறுதலிலே!"

என்று பாடும் இளங்கவிஞரினது படைப்புக்கள் அநேகமாகச் சுடரில் வெளிவந்துள்ளன. இவரது இலக்கியப்பணி தொடர்ந்தும் பாரில் பல கிளை கொண்டு வியாபித்துநிற்கட்டும்.

—இ. இங்கராசா, திருகோணமலை.—



விடும் காணும் மடியை!

"எடும் காணும் என்பணத்தை"

"ஓய்! உம்முடைய பணத்தை படக்கி வைத்து மாடிவீடா கட்டப் போகிறேன். பணத்தைத் தருகிறேன் மடியை விடும் காணும்."

"எப்போது பணம் தரப்போகிறீர்?"

"என் மகன் வெளிநாட்டால் பணம் அனுப்புவான் தந்திடுவேன்."

"எப்போது அனுப்புவான்?"

"வெளிநாட்டிற்குப் போனதும் ...."

"எப்போது போவான்?"

"பாஸ்போட் விசா எடுத்ததும்......"

"எப்போது எடுப்பான்"

"ஒரு நம்பிக்கையான ஏஜன்சியை தேடிக் கொண்டிருக்கிறன். கிடைத்ததும் வெளிநாடு போவான் பணம் அனுப்புவான். அதன்பின் உம்முடைய பணத்தை தந்துவிட மாட்டேனு? விடும் காணும் மடியை!'

—குமார் தபைால்—

★ ★ ★

நிதி சேகரிப்பவர்: "எங்க சங்கத்தின் கட்டட நிதிக்காக நீங்க பதினைந்தாயிரம் தந்த தற்கு ரொம்பவும் நன்றி. ஆனு செக்கில் நீங்க கையெழுத்தை போடவில்லையே?"

வர்த்தகர்: தரும காரியத்திற்குப் பணம் கொடுக்கும்போது நானே என் பேரை எழுதித் தம்பட்டம் அடித்துக் கொள்வது எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்காது ஸார்!"

* * * * * * * * *

கழுதைகள் விரும்பிச் சாப்பிடும் ரொட்டி எது தெரியுமா?.. ......

எது?

'சுவ' ரொட்டி!

* * * * * * * * *

தபால்காரர்: சார் இந்த வீட்டில் இருப்பவர் பெயர் ஸ்ரீரங்கம் தானே. எங்கே போயிருக்கிறுர்? அவருக்குத் தந்தி வந்திருக்கிறது.

பக்கத்து வீட்டுக்காரர்: அவர் காசிக்கு போயிருக்கிறுர். யாரிடமிருந்து தந்தி?

தபால்காரர்: பழனியிலிருந்து சிதம்பரம் என்பவர் தந்தி கொடுத்திருக்கிறுர். திருப்பதி என்பவருக்கு உடம்பு சரியில்லையாம்.

* * * * * * * * *

சிவமணிமாணிக்கவாசகர்.

★ ★ ★

சிறுவன்: "அப்பா ஏன்..........? இந்த "ஆமிக்" காரர் எல்லோரும் ஆமையோட்டை தலைக்குமேலே கவிழ்த்து போட்டிருக்கினம்"

தந்தை: "(சிரித்துவிட்டு) அது ஆமை ஓடு அல்ல கண்ணு......அது அவர்களுக்கென்று அரசாங்கம் கொடுத்த இரும்புத் தொப்பி

* * * * * * * * *

நீதிபதி: "(வழக்கறிஞரைப் பார்த்து) நீங்கள் எதிரி சார்பாக உங்கள் வாதத்தை ஆரம்பிக்கலாம்"

வழக்கறிஞர்: "எந்தவாதம் ஐயா........ 'இனவாத' மா..........? அல்லது 'பயங்கர? வாத' மா......?"

நீதிபதி: ......?.. !...?...!...?

* * * * * * * *

ஒருவர்: "அந்த பிரதான வீதியில்தானே தேர்தல் கூட்டம் நடத்துவதாக உத்தேசிக்கப்பட்டது!, பின்பு ஏன் திடீரென வேறொரு இடத்திற்கு மாற்றியமைத்தார்கள்..........?"

மற்றவர்: "அந்த பிரதான வீதியில் வீதி திருத்துவதற்காக 'கற்களை' நிறைய குவித்து விட்டிருக்கினமாம்."

* * * * * * * *

தாமு: என்னடாப்பா, நீ கடன் வாங்குவதற்கு கொஞ்சமும் யோசிப்பதாக-பின்வாங்குவதாகக் - காணவில்லையே.

சோமு: தமிழில் "அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி" என்றொரு பழமொழி உள்ளதே, தெரியுமா?

* * * * * * * *

அப்பு! "தேர்தல்" சரியா "தேடுதல்" சரியா?

சுப்பு: "தேடுதல்" தான் சரி.

அப்பு: எப்படி?

சுப்பு: மேடை தேடுதல், மாலை தேடுதல், தொண்டர் தேடுதல், வாக்குத் தேடுதல், வாக்காளர் தேடுதல், கொள்கை தேடுதல்— என்றிப்படி எல்லாமே புதிதாகத் தேடுதல் போடும் காலம் இது. எனவே தேடுதல்தான் சரி.

* * * * * * * * *

ஆசிரியர்; இறந்தவர்களும் தேர்தல் காலத்தில் ஒரு நாள் மாத்திரம் உருவெடுப்பார்கள். அந்த நாள் எது?

மாணவன்: வாக்களிக்கும் நாளில் சேர்

"குன்றுதோருடி"

★ ★ ★

# ஒரு நூற்றாண்டின்
# இரு தமிழ் நாவல்கள்

எஸ். அகஸ்தியர்

இந்தச் சம்பவத்தின் பின்பே நிகழ்ச்சிகள் பின்னப்பட்டு 'அசன்பே சரித்திரம்' கதையும் 'களை'கட்ட ஆரம்பிக்கின்றது. நாவலை ஒரே மூச்சில் வாசிக்கும் போது, நாவலில் உள்ள கதையின் உயிரோட்டத்தைவிட, கதையில் வரும் உப நிகழ்வுப் பின்னல்களும், கதை மாந்தர்களின் தனித்துவக்கதைகளாக வார்க்கப்பட்ட விவரணங்களுமே மிகவாகத் தெரிகின்றன. நாவலைச் சற்று ஆழ்ந்து படிக்கும்போது தான் இச்சம்பவப் பின்னணிகளும், கதைமாந்தர்களின் தனிக்கதைகளுக்கான விவரணங்களும் எங்கோ ஓர் அந்தகாரத்தில் ஆஜாடபூதிகளாகத் தொங்கி நிற்பனபோன்று உணர்த்துகின்றன.

'பிரதாப முதலியார் சரித்திரத்தில் பாத்திரங்களின் குணதோஷங்களைச் சித்திரிப்பதற்கென்று வேதநாயகம்பிள்ளை கையாண்ட சில உத்திகள் போன்றே. சித்திலெப்பையும் 'அசன்பே சரித்திரத்'தில் பல உபகதைகளையும் தடுக்க நீதி, உபநிடதம் போன்ற உருவகங்களையும் வர்ணனைகளையும் அதீதமாகக் கையாண்டுள்ளார். இன்னொருவகையில் இந்த வர்ணனைகள் நாவலுக்கு இலக்கிய வலுவூட்டுவனவாக அமைந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. கையாண்ட வர்ணனைகள் கவிதை போன்று இசை மீட்டுக்கொண்டிருப்பனவாகவும் இருக்கின்றன.

'முன்னரவர் துக்கத்தினால்
யோசித்ததையும்,
பின்னர் அக்கடிதத்தை வாசித்ததையும்.

'அல்லாகூ அல்லாகூ என் கர்த்தாவே
என் பத்தாவெங்கெனச் சத்தமிட்டுத்
தலையணையின் மீது பொத்தென
விழுந்தாள்

கவிதை போன்று காவிய நயத்துடன் வாக்கியங்களைக் கொலுவிருத்திய விதத்தில் ஆசிரியர் கையாண்ட சொற் சித்திரங்கள் எத்தகைய அழுத்தமாக விழுந்துள்ளன என்பதற்கு மேற் கூறிய வாக்கியப் பின்னல்கள் சான்று. வசனங்களை வாக்கியங்களை - வார்த்தைகளை - சொற்களை அமைப்பதில் ஆசிரியர் சித்திலெப்பை கண்ட வெற்றி, கதைப்பின்னலில் ஒறுப்பாகவேயுள்ளது.

'ஆயிஷா ஏன் இக்கதிக்கு ஆளானுன்!' என்பதனை விரிக்க வந்த - விரிக்கவேண்டிய ஆசிரியர், அக்கட்டத்தில் நாவலின் வேகமான கதையோட்டத்தை, ஆயிஷா மரணித்தது போலவே அப்படியே 'பொட்'டென்று விட்டுவிட்டு, அவள் கதையை ஆசிரியர் தானே முன்தோன்றி இந்தப் பரிதாபமான காரியஞ் சம்பவிக்கக் காரணமென்னவென்று இதை வாசிப்பவர்களறிய ஆவலாயிருப்பீர்களாகையால் அதையுமிங்கு சொல்லுகின்றோம்' என்று கட்டியன் தோரணையில் விஸ்தரிக்கின்ருர்.

'ஆயிஷா மதீனத்திற் பிறந்தவள். அவள் பத்து வயதுள்ளவளாயிருக்கும் போது, இபுருகீம் என்கிற பெயரையுடைய ஒரு அறபிக்கு நிகாகு (காந்தர்வமணம்) செய்யப்பட்டாள்' என நாவல் ஆரம்பித்து, அந்த இபுருகீமினின் விருத்தாப்பியங்களையும் விஸ்தரித்துச் செல்கிறது. அந்த இபுருகீம் பின்பு வியாபாரத் தொழிலினிமித்தம் தூனிஸ் என்ற ஊருக்குச் சென்று வியாபாரஞ் செய்து சீவித்திருக்கையில், 'பேதி' நோயால் இறந்து விடுகிருன்'. என்று கதை பரவியதாய்ச் செல்லும் நாவல், பின்பு 'இபுருகீம் இறக்கவில்லை' என்ற ஊர்ப் பேச்சோடு உறுதி செய்யப்படுவதாக நகர்த்தப்படுகின்றது.

பிறகு இபுருகீம் மஃரிபு தேசத்துப் பெண்ணொருத்தியைக் கல்யாணஞ் செய்கிருன். அப்பெண்ணோ இவன் கொடுமை தாங்காது மரணிக்கிஃருள். பின அவன் தனது சொந்த ஊரான சூரத்துக்குத் திரும்புகின்ருன்.

அங்கு அவன் ஆயிஷாவைச் சந்தித்த போது அவளிடம் பணம் அபகரிக்கததிட்டமிட்டு முன்னொருகால் நிகாகு(காந்தர்வமணம்) புரிந்ததை நினைவூட்டி, அதனை அவள் புருஷனிடம் கூறப்போவதாகப் பயமுறுத்துகிருன். அவள் திகிலடைந்து, அவனுக்கு ஆயிரம் ரூபா கொடுத்து. 'தயவு செய்து இந்தப் பக்கம் இனி வராதே' என்று கெஞ்சிக் கேட்கின்ருள். அவன் அவள் வேண்டுதலை ஏற்றுக்கொண்டு இந்தியா சென்று அங்கே பல கிராமங்களில் வியாபாரஞ்செய்கின்ருன். பணம் கரைகிறது. மறுபடியும் ஆயிஷாவிடம் வந்து இரண்டாயிரம் ரூபாய் தரும்படி கேட்கின்ருன். அவன் கேட்கும் தொகை இப்போது இவளிடம் கிடையாது. எனவே, தனது கஷ்டத்தைக் கூறுகின்ருள். அவனோ விடுவதாயில்லை-அடம்பிடிக்கின்ருன். 'நாளை மத்தியானத்திற்கு முன் இரண்டாயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு நீ வராமற்போனுல் என் பிரியப்படி செய்வேன்' என்று ஒரு நிபந்தனையுடன் பயங்காட்டி விட்டுத் திரும்புகிருன்.

ஆயிஷா உள்ளே சென்று 'பணஞ்சேகரித்துக்கொடுத்துவிட' உள்ளே சென்று பார்க்கிறாள். சிறு தொகைதானும் இருக்கவில்லையாதலால், மறுநாள்வரை அந்த ஏக்கத்துடன் கதிகலங்கிக்கொண்டிருந்தாள். அவனே தான் முன் கூறியபடி வந்து ஒரு கடிதம் எழுதி ஒரு சிறுவனிடம் (அசன்) கொடுத்தனுப்புகிறான். அந்தக்கடிதமே ஆயிஷா அப்படி இறக்கக் காரணமானது.

அந்தக் கடிதம் இது ;

'ஆயிஷாவே, நீ சொன்னபடி வருவாயென்று உறுதியாய் வழிபார்த்திருக்கிறேன். நீ இன்னுமொரு மணி நேரத்துக்குள்ளாக வந்து என்னைக் கண்டு கொள்ளாதிருந்தால் உன் அந்தரங்கமெல்லாவற்றையும் வெளியாக்கி விடுவேன். அப்போது உன் புருஷன் உன்னை விட்டு நீங்கி விடுவான். ஒரு மணி நேரம்! ஒருமணி நேரம்! ஒருமணி நேரம்!!!'

திருமணமாகி அன்யோன்யமாகத் தாம்பத்திய வாழ்க்கை நடத்தும் ஓர் பரிசுத்தமான பெண்ணுக்கு இரண்டாம் மனிதன் - தேவையற்ற ஓர் உரிமை பாராட்டி - பணயம் வைத்து - அவள் புருஷனையும் இழுத்து — அம்பலப்படுத்துவதாக — இல்லாத ஒன்றையே கூறுவதாக வெருட்டும்போது எந்தப் பெண்தான் திகைக்காதிருப்பாள்? இக்கட்டத்தில் வாசகன் நெஞ்சையே உலுப்பச் செய்துள்ளார் ஆசிரியர்.

அந்தச் சம்பவத்தை அவ்வாறு கதை மாந்தர் மூலம் உணர்ச்சிகரமாகச் சித்திரித்த ஆசிரியர், தற்காலத் தமிழ் சினிமாப் பாணியில் கதையோட்டத்தை நிறுத்தி விட்டுப் பாட்டும் பயனும் காட்டும் பாவனையில், கதையம்சத்தை விட்டுவிட்டு இதிலும் தானே முன்தோன்றி, 'இக்கதையை வாசிக்கின்ற பெண்களுக்கு நாம் சொல்லுகிற உபதேசமாவது' என்று 'போதிக்கவாரம்பிக்கிறார்.

இலக்கியங்கள் அன்று தொட்டு இன்றுவரை ஏதோ ஒரு வகையில் பிரசாரசாதனங்களாகவே திகழ்கின்றன. தான் விரும்பிய கருத்தினைவாசகனுக்குச் செலுத்தவே இலக்கியவாதி கதைகளையும் படைக்கின்றான். ஆனால், அதே இலக்கியவாதி கதையையும் கதை மாந்தர்களையும் விட்டு தானே பிரசாரகாரனாகி விடுவானாயின், கதை உத்திகளை இலக்கியத்தில் ஏன் கையாளவேண்டும்? இன்றும் இத்தகைய சில இலக்கிய கர்த்தாக்கள் இத்தகைய போக்கினைக் கையாள்வதால் இதில் இக்கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஆனால், ஆசிரியர் சித்திலெப்பை இதனை விடக் கையாண்ட வேறுபல உத்திகளும், மனிதாபிமானக் கருத்துக்களும் போதனைகளாக' உருவாகியிருப்பினும், இலக்கிய மணம் கமழவே செய்கின்றது.

'பெண்களே, புருஷனுடைய பாதத்தைச் சிரமேற்கொண்டு வணங்கி நடந்து வந்த இந்தச் சற்குணமுடைய பெண்ணுக்கு நேரிட்ட பரிதாபமான முடிவைச் சிந்தியுங்கள். அவள் மாசற்ற பத்தினியாயிருந்தும், ஒரு இரகசியத்தைத் தன் புருஷனுக்கு மறைத்த காரணமே அவளை உயிரிழக்கச் செய்தது'

குடும்பப் பெண்களை விழித்து இவ்வாறு வினயமாக்க் கேட்கும் ஆசிரியரின் இதயதாகம் ஓர் எச்சரிக்கையாக வெளிப்படுவதையும் அவதானிக்கலாம்.

தாம்பத்தியப் பெண்கள் மட்டுமன்றி, குடும்பங்களிலுள்ள சகல ஆடவர்களும் தமது மனைவியாரிடத்தில் எந்தவோர் சிறு இரகசியத்தையும் மறைத்தல் கேடாக முடியும். என்பதனை வாசகனுக்கு இது உணர்த்தவே செய்கிறது. ஆனால், தமது கருத்தினை இலக்கியத்தினூடாக மக்களுக்குக் கூறும்போது, அது 'பிரசாரம்போல் இருக்க வேண்டுமேயன்றி, 'பிரசுரமாக' விருக்கக் கூடாது என்பதனை வலியுறுத்திக் குறிப்பிடவேண்டியுள்ளது. ஆசிரியர் சித்திலெப்பையின் இவ்வுத்திகள் இந்நாவலில் முழுக்க முழுக்கப் பிரசாரமாகவருப்பதால், நாவல் அதன் இலக்கிய அந்தஸ்திலிருந்து சற்றுப் பிறழ்ந்திருப்பதை நாம் ஒப்பத்தான்வேண்டும். இந்தக் கட்டத்தில் மறுபடியும் வாசகர்களுக்கு ஓர் உண்மையை வலியுறுத்தவேண்டியிருக்கிறது. நூறு வருஷங்களுக்குமுன் தமிழ் நாவல் இலககியத்தில் இறங்கிய ஜனுப் சித்திலெப்பையிடமோ, திரு. வேதநாயகம்பிள்ளையிடமோ நாவல் இலக்கியத்திற்கான இலக்கணம் அதுதாவென்றோ சரியான வரையறை ஆரம்பிக்காததனை மனசிருத்தல் அவசியம். இதனைக் கருத்திற்கொண்டு பார்க்கின், அக்காலம் ஆசிரியர் சித்திலெப்பை நாவல் என்ற பெயரில் கதை சொல்ல முயன்றாரேயன்றி நாவல் இலக்கண உருவத்தை உருவகப்படுத்தி வார்க்கமுனையவில்லை என்பது ஒருபுறமிருக்க, சொல்லவந்த விஷயங்கள் அவர் மனசில் அலையடித்துக் கொண்டு சிறு குழாயினால் சீறியடித்த நீர் வாக்கில் அதனையும் மீறிப்பாயும் வீச்சாகவே அவர் தன்னிலைப் பாடாய்க் கூறும் கருத்துப் பரவல்கள் எனலாம். இது நாவலை ஊறு செய்ததாகவும், எடுத்தாற்போல் அசட்டுத்தனமாகச் செய்தாற் சொல்வதும் கால இட ஏவல் (இடம் பொருள் ஏவல்) கவனியாமல் விமர்சனம் செய்யும் கோமாளித்தனமாகும். இந்த நிலையிலிருந்தே இந்நாவலை ஆய்வு செய்தல் வேண்டும்.

கதைக்கு இனி வருவோம்.

(தொடரும்)

# காவியமானவள்

## குறுங்காவியம்

அனலை - ஆறு - இராசேந்திரம்

''மன்னிப்பு உலகத்தில் மக்கள் நாவில்
மலிவான ஓர் சரக்கு அறிவேன் நானே
கன்னியரைத் துய்த்தபிலர் காலாற் றள்ளி
சாக்கடையிற் போடுபவர் சதிகாரர்கள்
கன்னலென மொழிபேசி நஞ்சைப் பாய்ச்சும்
கயவர்கள் — யாவர்க்கும் மன்னிப்பென்னில்
மன்னுலகில் நீதியெனும் தேவன் ஆட்சி
மலர்ந்திருப்ப தெப்படியோ அறியேன் நானே.

ஒப்புயர்வில் இறைவாழும் கோயில் தன்னில்
ஒழுங்கீனம் நடந்திட்டால் யாது செய்வர்?
அப்பழிக்காய் அருஞ்செல்வம் பலவாய்க் கொட்டி
அபிடேகம் செய்திடுவர் குறைகள் நீக்க
இப்புவியில் பெண்மை ஒரு கோயில் என்று
பெரியோர்கள் கூறிடுவர் அன்று தொட்டு
அப்படியேன் பெண்மையுறு குற்றம் போக்க
அபிடேகம் நிச்சயமாய் வேண்டும் தானே?

மன்னித்தேன் என்று சொலி மீண்டும் சேர்ந்து
மகிழ்வதிலே யாது பலன்? புவியில் என்றும்
கன்னியென வாழ்ந்திந்தக் கறையை நீக்க
காலமெலாம் அபிடேகம் செய்வே னென்றே
என்னிதயம் கொண்டிட்டேன்; ஏனோ நீங்கள்
எனக்காக வாடுகிறீர்? வேறோர் பெண்ணை
நன்மனையாய்க் கொண்டிடலாம் நாளும் ஆங்கே
நல்லின்பம் பெற்றிடலாம் தானே?'' என்றாள்.

நான் வாழ்வேன் என்றிங்கே கருதிடாதே
நாயாக அன்றுபுரி பிழை பொறுத்து
நல்வாழ்வு தருகவெனக் கேட்டேன் நீயோ
தூய்தான வழிதேரும் நாட்டம் கண்டேன்
துடிக்கின்ற இதயத்தோடொன்றே கேட்டேன்
பேய் அல்ல நான் மனிதன் "நின்முடிபு
இறுதியதோ...? சொல்லிடுக போதும்" என்றான்.

"முதலிறுதி என்றில்லை நெஞ்சந் தன்னின்
முடிந்த முடிபிது வொன்றே" - தோகை சொன்னாள்
நிதம் மாறும் கொள்கை புவி எனக்குமில்லை
நின்முடிபே யான் கொள்வேன் அன்று செய்த
அதர்மமது போக்கிடுவேன் எந்தன் வாழ்வை
அர்ப்பணிப்பேன் அப்பிழைக்காய்" என்றான் மாது
புதுமலராய்க் குணம் காட்டி எழுந்தாள்; அந்தப்
புது மகன் நடைதொடர்ந்தான் வீடு நோக்கி.

(வேறு)

என்றுமே சொல்லி வீடு
ஏகிட எழுந்த மாதை
நின்றிடச் சொல்லி அன்னாள்
நீட்டினள் மகனை முன்னே
வென்றிடும் அன்பினோடு
வாங்கியே மார்பணைத்து
கொன்றிடும் கோலம் போன்று
கோடியாய் முத்த மீந்தாள்

பொன்வயி றுதித்த செல்வம்
போகிடும் காட்சி கண்டு
தன்னிரு கண்ணிருந்து
தாரையாய் நீர் சொரிந்து
அன்னமே அழுத காட்சி
அள்ளிடும் மனத்தை அந்தக்
கன்மனம் ஏனோ கொண்டாள்
காரிகை என்றே தோன்றும்.

கன்மனம் கொண்ட செல்வி
காலத்தை வென்றுவிட்டாள்
சின்னவள் என்று ஊரே
சிரித்திடக் கதைகள் சொன்னோர்
பன்னியே அவள் திறத்தை
பாடுதல் நாமும் கண்டோம்
இந்நிலம் இன்று பெற்ற
இணையிலாச் செல்வி அன்னாள்.

செய்திடு பிழைகட் கெல்லாம்
செகத்திலே ஆசை மூலம்
ஐயலோ அந்த உண்மைத்
தத்துவம் தெரிந்து போலும்
மையலை வென்று இந்த
மாநிலம் சிறந்துவிட்டாள்
செய்த என் கவியிற் கூட
காவிய உறவு மானாள்.

(முற்றும்)

P. S. ரவீந்திரநாதன்.
சாந்தாதோட்டம்,
ஆவரங்கால்,
புத்தூர்.

பொழுதுபோக்கு: பத்திரிகை சஞ்சிகை, சினிமா, உதைபந்து என்பன.

பி. பிறேமகுமார்.
"சக்தி வாசம்"
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

பொழுதுபோக்கு: கதைப் புத்தகம் வாசித்தல், பேனு நண்பர், நண்பியர் தொடர்பு

ச. றஞ்சித்.
"புஸ்பவாசம்"
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், விளையாட்டு, டெலிவிசன்

தா. மோகனதாஸ்,
பாடசாலை வீதி,
கோபாலபுரம் நிலாவெளி.

பொழுதுபோக்குகள்: தமிழீழ விடுதலை சம்பந்தமான பத்திரிகைகள் வாசித்தல், கராட்டி பயிற்சி, கரப்பந்தாட்டம்

க. யோகராஜா,
அந்தோனியார் கோவிலடி,
புங்குடுதீவு - 2.

பொழுதுபோக்கு: கிரிக்கட், T. V., சஞ்சிகை நாவல் வாசித்தல், என்பன.

ஏ. பி. அருளானந்தம்
334, இராமகிருஷ்ணன் வீதி,
அன்புவழிபுரம்,
திருகோணமலை.

பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், சமூகத் தொண்டு, கதை, கவிதை புனைதல்.

ஹெரால்ட் டேவிட்,
மணிக்காடு,
புங்குடுதீவு - 10.

பொழுதுபோக்கு: சுடர் வாசித்தல், பேனு நண்பர் நண்பி தொடர்பு.

வே. பத்மநாதன்,
பொன்ஜியன் ரோட்,
கொழும்பு - 12.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், நண்பர், நண்பிகளுடன் தொடர்பு.

எஸ். கே. பிரகாஷ்
பிரதான வீதி,
முதலியாகுளம்
செட்டிகுளம்

பொழுதுபோக்கு: சிறுகதை, கட்டுரை, நாடகம் எழுதுதல், நடித்தல்.

சுடர் நண்பர் வட்டம்

வி. எஸ். சிவநேசராஜா
பிரதான வீதி,
ஆறுமுகத்தன் குடியிருப்பு,
தன்னுமுனை, செங்கலடி.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல். பேனு நண்பர் தொடர்பு.

சிவமணி மாணிக்கவாசகர்.
'செல்வபவனம்'
தங்கோடை,
காரைநகர்.

பொழுதுபோக்கு: வானொலி நிகழ்ச்சிகளில் பிரதி மூலமாக கலந்து கொள்ளுதல், அரசியல் பற்றி கலந்துரையாடல், சுடர் வாசித்தல் என்பன.

இரா. இராஜபாலா.
"ராஜ் பவனம்"
பொன்வீதி,
சங்கானை.

பொழுதுபோக்கு: ஓவியம், கவிதை எழுதல், முத்திரை சேகரித்தல், பிறரை இயன்ற அளவு சிரிக்கவைத்தல்

இ. சுகிர்தராஜன்,
மே/பா செ. இராஜலிங்கம்
பிரதான வீதி;
கிளிவெட்டி.

பொழுது போக்கு: பேனு நண்பர் தொடர்பு, வானொலி கேட்டல், டி. வி. பார்த்தல்,

T. நஜிமுல் குதா
ஜாவா வீதி,
கிண்ணியா - 7.

பொழுதுபோக்கு: கதை, பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

எம். எல். சத்தார்.
றஹ்மானியா வீதி,
2ம் வட்டாரம்,
சின்னக் கிண்ணியா.

பொழுதுபோக்கு: கதை, கட்டுரை வாசித்தல், வானொலி கேட்டல்.

த. பிரபாகரன்,
11ம் வாட்,
குறுமன் வெளி,
களுவாஞ்சிக்குடி.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், நாடகம் எழுதுதல், நடித்தல், நாவல் வாசித்தல்.

ஆர். இரத்தினகுமார்.
72 ஏ, மேற்கெல்லை,
செங்கலடி.

பொழுதுபோக்கு: கதை, கட்டுரை, பத்திரிகைப் புனைவுகள்,

செல்வி என். பி. செல்வராணி
வசந்த பவனம்,
மருதடி மேற்கு,
சாவகச்சேரி.

பொழுதுபோக்கு: ஓவியம், கவிதை, தையல், கதைப் புத்தகம், பத்திரிகை வசித்தல்.

எஸ். மனோகரன்
இல. 141, ஸ்டேசன் ரோட்,
நுகேகொடை.

பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், நண்பர் தொடர்பு, பத்திரிகை வாசித்தல்.




## O அருண் விஜயராணி O

ஆத்ம திருப்தி தாக்கத்தை ஏற்படுத்தும் போது எழுதுவதே தவிர சன்மானம், பரிசு, பணம் பார்த்து நான் எழுதுவது கிடையாது எனக் கூறிக்கொள்ளும் அருண் விஜயராணி 1974ல் வெளியான "அவன் வரும் வரையில்" சிறுகதை மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர் கடந்த எட்டு ஆண்டுகளுள் 40ற்கு மேற்பட்ட கதைகளை எழுதிய விஜயராணி ஆரம்ப காலங்களில் விஜயராணி செல்லத்துரை என்ற பெயரிலேயே எழுதி வந்துள்ளார். தனது திருமணத்தின் பின்னர் அருண் விஜயராணி ஆக எழுத ஆரம்பித்த இவரது "விசாலாட்சிப் பாட்டி பேசுகிறார்"; "ஒரு குமர் கரை சேருகிறாள்"; போன்ற சித்திரங்களை வானொலி நேயர்கள் எளிதில் மறந்திருக்க மாட்டார்கள் !

கணவர் அருணகிரி அவர்களுடன் சவூதி சென்றுள்ள அருண் விஜயராணியிடம், "சென்று வந்து சிறுதொகுப்பு வெளியிடுவீர்களா?" என்று வினவியபோது பதில் இவ்வாறு கிடைத்தது! "மலிவுப் பதிப்புகளின் ஆதிக்கமும் தழுவல்களின் ஆதிக்கமும் குறைந்து எப்போது தரமான படைப்புகளின் ஆதிக்கம் நிலவுகிறதோ அப்போதே அதைப் பற்றி யோசிப்பதாக உள்ளேன்!", எது எப்படியோ அருண் விஜயராணிபோன்ற 'அறிவொளி' மிக்க பெண் எழுத்தாளர்கள் தங்கள் தொகுப்புகளை ஈழத்திற்குவிரைவில் இனங்காட்டுதல் அவசியம்!

## O இதய கீதம் O

இதய கீதம் எழுத்தாளர் ஒன்றியம் இளம் கவிதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிட்டு வருகிறது! "பானு தங்கம்" என்பவரை ஆசிரியராகக் கொண்டு மஸ்கெலியாவிலிருந்து மாதாந்தம் மலரவுள்ள இத்தொகுப்பின் முதல் கீதம் ஜூலை மாதம் வெளியாகியுள்ளது! பக்கங்கள் குறைவாக முதல் கீதம் இசைந்தாலும் தொடரும் கீதங்கள் நிறைவாகும் என எதிர்பார்க்கலாம்! ஈழ இளம் கவிகளை 79, தபாற் கந்தோர் வீதி மஸ்கெலியாவிற்கு அழைக்கிறது இதய கீதம்!

## O துர்க்கா O

கலைஞர் எஸ். கே. யோகநாதன் அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டு 31/2, காரைக் காட்டு வீதி; வண்ணை வட மேற்கு; யாழில் இருந்து "துர்க்கா" எனும் கலை இலக்கிய ஏடு மிக விரைவில் மலரவுள்ளது!

## O பஞ்சமர் O


கே. டானியல் அவர்களின் பஞ்சமர் இரு பாகங்களுடன் பிரதி ஒன்று ரூபா 60ற்கு விற்பனையில் உள்ளது! நல்ல ஒரு நாவல் பெற்ற பூரிப்பு மனதை நிறைத்தாலும் இந்த விலை கொடுத்து புத்தகம் வாங்கி வாசிக்க எம்முள் எத்தனை பேருக்கு வசதியுள்ளது? நம் நாட்டுப் படைப்புகள் தமிழ் நாட்டில் அச்சேறும் போது ஏற்படும் இந்த 'விலை வீக்கத்தை' நம் கதைஞர்கள் கவனித்தே செயலாற்ற வேண்டும்!

## O தாரகை. O

நின்றுபோன தாரகைக்கு கடந்த ஜூலை தொட்டு மீண்டும் ஒளி கொடுத்துள்ளார் கண. மகேஸ்வரன். புலவர்மணி அவர்களை அட்டையில் இட்டு 24 பக்கங்களுடன் இதழ் ஒன்று 2/50ற்கு விற்பனையில் உள்ள இவ்விதழில் தாழை செல்வநாயகம், பரமாசண்முகம் ஆகியோரின் சிறுகதையுகளுடன் கோகிலா மகேந்திரன், வடகோவை, சி. சங்கரப்பிள்ளை ஆகியோரின் கட்டுரைகளும் புதுகவிதை, விமர்சனங்களும் இடம் பெற்றுள்ளன! தனது வளர்ச்சிப் பாதையில் மட்டுமன்றி பொது நோக்கிலும் ஒரு 'முதுமை' காட்டும் தாரகையின் 'தளிர்ப்பு' அதன் 'புத்தொளி'க்கு நிச்சயம் வழி அமைக்கும்!

# நிஜங்கள்

பிரேமா



"அக்கா போயிட்டு வாறன்..."

"ஓம்...ஓம் சாப்பாடு முன்னறை மேசையில இருக்கு மறக்காம எடுத்திட்டுப் போ....."—கடவுளே இப்பவே போனல்தான் பஸ்ஸை பிடிக்க முடியும்..... ஏன் இவ்வளவு நேரம் தாமதிச்சனே... ம்...

அவசரமாக புறப்பட்ட தமயந்தியின் முகத்தில் திடீர் என ஓர் குறு நகை.

"அக்கா..."

"என்னடியம்மா இன்னும் போக இல்லையா... நான் மத்தியான சாப்பாட்ட இனி கவனிக்க வேணும். ம்...... என்ர விதி...... உங்களுக்கிடையில கிடந்து படவேண்டிக் கிடக்கு..."

கேட்க வந்ததை கேட்போமா விடுவோமா என பரிதவித்த மனம், கேளு, கேளு என்று தூண்டும் ஆசை.

"ஒன்றுமில்லை இண்டைக்கு மத்தியானம் அண்ணனும் அண்ணியும் வருவினம் அல்லே...... ஏதேனும் நான் வாங்கியர வேணுமே... அது சரி ஏனும் வருகினம்...?"

எதிர்பார்க்கும் பதில் வருமா என, கற்பனையில் ஆழ்ந்த விழிகள் ஏதோ ஒன்றை எதிர்பார்ப்பனவாய் கனவில் மிதந்தன.

"உனக்கேனடி அந்தத் கதாலை நீ பேசாமல் போயிட்டு வா...... அவன்கள் ஏதோ உன்னில பாசம் வழியுதாம் என்டுகொண்டு வருவான்கள். கிடக்கிறத தின்டுட்டு போவான்கள். எததான் ஒழுங்கா செய்தான்கள் அவன்கள் மட்டுமா எங்கட அருமை பெருமையான அப்பன் அம்மாக்கள் கூட எதக்கிழிச்சினம் ஏதோ நம்ம தலை விதி......நீ போ..."

உன்னிட்ட இருந்து தான் இல்லதா ஒரு பதிலை எதிர்பார்க்கலாமா..? மனதுக்குள்ளாக தன் நப்பாசையின் ஏமாற்றத்தால் தலையை குனிந்தபடி பதில் ஏதும் பேசாமல் வெளியே நடந்தாள் தமயந்தி.

'எதைத்தான் ஒழுங்கா செய்து கிழித்தார்கள்'—அடிக்கடி அக்கான்ர வாயில வாற வார்த்தைகள். ம்... அவதான் என்ன செய்வா? இருந்திருந்து 35 வயசுக்குப் பிறகு அம்மாவும், அப்பாவுமாக ஒரு பெரிய இன்ஜினியருக்கு சீதனம், பாதனத்தோட தாரைவார்த்துக் கொடுத்தால் அந்த மனிதர் 5 வருட தம்பாத்தியத்தில் எனக்கு ஒரு வாரிசை தரலாயக்கற்றவள் என ஒதுக்கிய போது மனம் குழம்பி பிதற்றி திரிந்துவிட்டு இப்போதுதான் கடவுள் புண்ணியத்தில் ஜீவனும்சதீதுடன் வாழ்க்கை போகிறது. அடுத்தடுத்து அண்ணன் மார்கள், திருமணத்தின் பின்னர் கடைசிப் பாரமாக நின்ற தமயந்தி. அந்தப் பாரத்தையும் ஒரு கரையிலேயே ஒதுக்கும் முதல் விபத்திலே ஜோடியாக மரணமான பெற்றோர்கள்; எதிர்பாராத செலவுகளாய் தமயந்தியின் தலையில் விழ ஒற்றையாக பெற்றோர்களின் கடைசிக்காரியங்களை தன் பெயரில் தகப்பனர் போட்டு வைத்த பணத்தை எடுத்து நிறைவாக செய்து முடித்தாள்.

ம்...... நெடுமூச்சுகள் மனதின் அடியில் இருந்து புறப்பட்டன. தனது வாழ்வின் ஏமாற்றத்தால் எந்த நல்ல காரியங்களையும் வெறுக்கும் ஒதுக்கும் சகோதரி அவளது வாழ்க்கையிலேயே குறுக்கிடும் போதும் ம்... சகிக்க முடியாதது தான்.

"என்னடி பெரிய கலியாணம்...... இதோ பாரு சொல்லிப் போட்டன் நான் பட்ட பாடு போதுமடி நீயும் அந்தப் பாடு படவேண்டாம்...ஓம்...

சொல்லிப்போட்டன் அப்பிடி உன்ர இஸ்ரத்துக்கு நீ போய் ஏதும் செய்யிறதெண்டா நான் இப்பவே என்ர காணியில ஒரு வீட கட்டிக் கொண்டு போயி டுறன்... உன்ரை ஒரு வேலைக் காறி மாதிரி இருக்க மாட்டன் உனக்கும், உன்ர புருஷனுக் கும் சேவகம் புரிய..."

வாஸ்தவம் தான் 'மறுக்க முடியாத நிஜங்கள், அடித்த ளத்திலேயே ஏற்பட்ட வடுக் கள், அத்திவாரம் ஆட்டங் கண்ட வீடுகள்... பயங்கரமாக உறுத்தும் நினைவுகளால் எல்லாவற்றையுமே பயத்தோ டும், ஏமாற்றத்தோடும் பார்க் கும், பரிதவிக்கும் மனங்கள். மனம் கண்டபடி குழம்பினு லும் கால்கள் வேகமாக நடந் தன. பஸ்ஸைப் பிடித்து 'ஒவ் பீசை' அடைந்தபோது 8. 30 ஆகிவிட்டது அவசரமாக சென்று கையெழுத்தை வைத்துவிட்டு வேர்த்து விறு விறுக்க தன்சீற்றை அடைந் தாள்.

'அம்மாடி' நிம்மதியாக ஒரு மூச்சு வந்தது.

பெண்ணுப் பிறந்திட்ட எதற்கும் மூச்சுகளை இறைச் சுட்டு கம்முனு கிடக்கவேண் டிய ஒரு நிலை. தனக்குள்ளாக சிரித்தவள் மீண்டும் அந்த நினைவில் ஆழ்ந்தாள். கைகள் பைலில் மூழ்கி ஓடிக் கொண் டிருந்தாலும் மனம் ... அது பாட்டிற்கு வேறு ஒருபக்கத் தால் ஓடிக் கொண்டிருந்தது. இது அவளுக்கு கைவந்தகலை யும் கூட. கூடவே இதற்கு ஒரு உதாரணத்தையும் மனதிற் குள் எண்ணி சிரித்துக் கொள் வாள். கண்ணைத் திறந்திட்டே நித்திரை கொள்ளுறது போல...

கூட்டிக் கழிக்க வேண்டிய கருமங்கள் அவள் முன் பெருக் கமாகக் கிடந்தன. கம்யூட்ட ரைப்போல தன் வேலையில் மும்முரமாக ஈடுபடலானுள்.

அண்ணு ஏன் இந்தமுறை அண்ணியோட வாருர். அண்ணு அடிக்கடி வாற ஆள்தான் ஆனு......அண்ணி...... ஒருவேளை இதுதான் அவவுக்கு பெறு மாதமோ.........யாருக்கு தெரி யும்...... வரும்போது அந்தரகு வையும் கூட்டி வருவினமோ... அப்பப்பா யமன்......... யமன் அவளின் அலுமாரியில் உள்ள புடவைகளை கிளறிவைத்தும், புதுசா மரத்தில பூத்தபூக்களை மரத்தின் காலடியில பிடுங்கிப் போட்டு...... ஒரே வால் தனம் 8 வயசில இப்பிடி எண்டா பெரிசாவளர்ந்திட்டானுனல்... அம்மாடி......

---

மறுபிறப்பு உண்டோ இல்லையோ? ஆனல் பூட் டான் மக்கள் மறுபிறவியில் அதிக நம்பிக்கை வைத்தி ருக்கிருர்கள். அவர்கள் 'பாச்சப்' எனும் ஒருவகை நடனம் ஆடுகிருர்கள் இதை ஆடினல் மறுபிறப் பில் நல்வாழ்வு கிடைக்கு மாம்.

---

ஆபிரிக்க சுதேசிகளான ஜுலு இனப் பெண்களை மணம் முடிக்க விரும்பும் ஆண்கள்தான் சீதனம் கொடுக்க வேண்டும். மாடு கள் தான் அங்கு பெறுமதி வாய்ந்த சீதனம். குறைந்த பட்சம் 11 மாடுகளையா வது சீதனமாக ஆண்கள் கொடுத்த பின்தான் திரு மணம் நடக்குமாம்.

---

அமெரிக்க ஜனதிபதி யாக கார்ட்டர்தேர்ந்தெ டுக்கப் படுவதற்கு முன் னரே தயாராகிய அமெ ரிக்க அகராதி நூலொன் றின் அமெரிக்க ஜனதிபதி பகுதியில் "கார்ட்டர் (ஜேம்ஸ்): பிறப்பு 1924 அமெரிக்காவின் 39 வது ஜனதிபதி 1977 முதல்..." என்று அச்சாகிவிட்டதாம். அந்நிறுவனத்தினருக்கு இவ்வளவு திடநம்பிக்கை முன்கூட்டியே ஏற்பட்டு விட்டது.

---

அண்ணு அந்தக் கடிதத்தில என்ன எழுதியிருப்பார் அக்கா காட்டக்கூட இல்லையே......ஒரு வேளை என் கலியாணத்தைப் பற்றித்தான் ஏதும் எழுதியிருப் பார்களோ....... திடீரென எழுந்த எண்ணப் புல்லரிப்புகள் உடலில் அர்ச்சனை புரிந்தன ஏதோ இப்போதாவது அவருக் கும் மனம் வந்து ஒரு காரியத் தில் இறங்கினு சரி......

இரண்டு பைல்களையும் முடித்துவிட்டு கதிரையின் முது கோடு முதுகை சாயவிட்டு கால்களை நீட்டி அமர்ந்தாள். சுழலும் ஃபானின் மையத்தில் அவளது முகம் உருண்டைப் பந்தாக கண் மூக்கு, வாய் எதுவுமற்ற ப்பிறைவுள் வட்ட மாக... அவளுக்கு மீண்டும் ஒரு முறை சிரிப்பு வந்தது.

அக்காவிலும் பார்க்க தான் வயசு போனவளா ஆயிட்டன்.......... ம்....... நான் ஒன்றும் பெரிய அழகில்லதான் ஆனலும் ஒரு பெண்...... அவ ளுக்கும் சில......... ஆசைகள் இருக்கும் அல்லவா அவைகள் சரியான முறையில நிறை வேருத நிலையில, தவருன பாதைகளில நடந்து போயி டுமோ என்ற பயம் நாளுக்கு நாள் விஸ்வரூபமாக எழுந்து, எழுந்து......... வேண் டாம்...... அந்தக் கற்பனை.

மனதிலுள்ளே அமுங்கி அழுகும் வேதனைகள் 36 வயசை யும் 40 ஆக காட்டிக் கொண் டதை பிரதிபலிக்கும் கண் ணுடி, ச்சி நிஜங்கள்தான் எவ் வளவுவேதனையை தருகின்றன!

பக்கத்து மேசையில் தன் வேலையை கவனித்து முடித்த திருப்தியுடன் நிமிர்ந்த ரமா தமயந்தியை கூர்ந்து பார்த் தாள்.

"என்ன சிஸ்ரர் இன்றைக்கு முகத்தில ஒரு சிரிப்பு ஒளிஞ் சிட்டு நிற்கிறது......"

"ஒவ்...... நத்திங்...... இன் றைக்கு அண்ணு வரப்போறதா கடிதம் போட்டிருந்தார்......"

அவள் வசனத்தை முடிக் காமல் நீட்டினுள்.

"கொங்ராயூலேசன் அப்ப சீக்கிரமா கலியாண சாப் பாடு..... ம்...உங்களுக்கு என்ன

## கிரேக்க ஞானி ஒருவரின் தத்துவம்

உலகத்தின் அபிப்பிராயத்தை அனுசரித்துக் கொண்டு உலகிலே வாழ்வது சுலபம். அப்படியே நம்மிஷ்டத்தின் படி இருப்பதும் சுலபம். ஆனால் எவனொருவன் ஜனசந்தடியின் மத்தியில் தனது தனிமையில் இனிமையைக் காண்கிறானே அவன்தான் யாவராலும் போற்றக் கூடிய பெரியமனிதனாகின்றான்.

**கி-வில்வராஜா,**
மட்டக்களப்பு

---

குறை பணமா, வீடா, வசதியோட உங்கள பற்றி கவலைப்பட ஒன்றுக்கு இரண்டு அண்ணன்மார்' பற்றாக் குறைக்கு அக்கா... ரியலி யூ ஆ லக்கி..."

ஆ........... அண்ணன்மார்கள் இருந்தும் என்னைப்பற்றி கவலைப்பட கூடியவர்கள் இல்லாத போது ....

இல்லை ரமா ...உன்மாதிரி நான் இருப்பேனானால் ஓ....... நான் எவ்வளவு அதிஷ்டம் செய்தவள், பணம், பரம்பரை இதில் எதுவுமே என் வாழ்க்கையை நான் அமைத்துக் கொள்ள எடுக்கும் ரிஸ்குகளுக்கு தடையாக இராதே ... மனதினுள்ளாக இதை கூறிக் கொண்ட தமயந்தி ரமாவை சீண்டினாள்.

"பாரேன் ரமா உனக்கு இன்னும் சில மாதத்தில சுழுத்தில பாரம் ஏறுதா இல்லையா எண்டு......"

"ம் .... இது பற்றி என் வீட்டில யாருமே கவலைப்பட மாட்டாங்க......"

கவலைப்பட மாட்டார்கள் தான்........ ஆனால் கவலைப்படுவது போல நடிக்கிறார்கள்.. ... ஆம் உண்மைதான்...... ஆனால் அந்த உண்மையை அவர்கள் நாங்கள் உணர்ந்து விட்டோமென்று அவர்கள் உணராதவாறு பதிலுக்கு நாம் நடிக்கும் நடிப்பு........ .... பொங்கிவந்த சிரிப்பை பல்லால் இதழ்களை அழுத்தி அடக்கினாள் தமயந்தி......ம் இயற்கையாக நடிக்கிறான் என்று நடிகர்களை தேடி ஓடும் மனிதர்கள் ஒவ்வொருவருமே இயற்கை நடிகர்கள்தான்.

* * * * *

அன்று பின்னேரம் பஸ்ஸைப் பிடிக்க அவசரம் காட்டியவளை ரமா கேலி செய்தாள்.

"அடடா போதுமே பரிதவிப்பு, அக்கறைப் படுறவங்கள் இருக்கிற போது நீங்க ஏன் அவசரப்படவேனும்......"

ஓ... ...நான் என் மனப் பரிதவிப்பை வெளியே உணரக் கூடிய வகையில் அல்லவா செயல்படுகிறேன்........ சீ அக்கறை உள்ளவர்கள் ம் . .அவர்கள் அக்கறையாக செயற்பட்டிருந்தால் இந்த 36 வயதில் நான் அவசரப்பட்டிருக்க மாட்டேனே......

கற்பனைகள் தான் மற்றவரை எவ்வளவு துரிதமாக சாடுகிறது நிஜத்திலே அவற்றைக்காட்ட முடியாதவாறு தான் என்னென்ன தடைகள் உறவுகள், மரியாதை, கௌரவம்..... ம் ..... பட்டியல் தான் நீளம்.

பஸ்ஸின் வெளியே நின்று ரமா கண்ணைச் சிமிட்டி நக்கலடித்தாள்.

அவள் பரிகாசங்களை ஒதுக்குவது போல வெளிக்கு காட்டினாலும் அவள் மனம் அதை ஏற்று மீண்டும் அவள் அப்படி சீண்டுவதை வரவேற்றுக் கொண்டிருந்தது. இது என்ன இன்றைக்கு என்மனம் இப்படிப் போகிறது. நாளைக்கு தாலி கட்டப் போகிறவளைப் போல பரிகாசங்களுக்கும், சீண்டல்களுக்கும் மனதை பறிகொடுத்துக் கொண்டு.....அவள் மனம் உண்மையாகவே ஏங்குவதை உணர்ந்தாள்.

பஸ்ஸின் நெருக்கத்தில் உண்மை உறவுகளாய் அன்றி உரசல் உறவுகளுக்காய் ஒட்டிக் கிடக்கும் ஆண்கள் இடியினால் பரிச்சயப்பட்டபுதியஉறவுகள். அவள் விழிகள் மௌனமாய் அவற்றைப் பார்த்தன, ரசித்தன. பார்வையால் குழையும் ஜோடிகள், முட்டிக்கொண்டு கிசுகிசுப்பவர்கள், தொலைவில் ஜன சமுத்திரத்தால் பிரிபட்டு ஏக்கவிழிகளை தூது விடும் ஜோடிகள். ஒருவித குறுகுறுப்புடன் அவர்களை பார்த்தபடியே நின்றாள்.

பின்னால் புதிய ஸ்பரிசம் மனம் லேசாக படபடத்தது. தூக்கிய கையின் இடையாக கடைப்பார்வையை ஓட விட்டாள். அவள் பின்னால் இடித்தபடியே நிற்கும் அந்த இளைஞன் அவள் மனம் விலகும்படி எச்சரித்தபோதும் ஏதோ ஒன்று.... அவளை நகர விடாமல்........ அது...... சீ....திடீர்என எழுந்த நினைவின் அசிங்கம் வேகமாய் முகத்தில் அறைந்தது. என் வயசு என்ன...... இந்தவயசில இப்படி ஒரு நினைப்பு? ஏன் மனம் இப்படிக் கெட்டுப் போகிறேன் என தறி கெட்டு அலைகிறது. பின்னால் இடித்தபடி நின்றவனுக்கு ஒதுங்கி வழிவிட்டு இரண்டு சீற்றுக்களிடையே விலகி நின்றாள். அவன் இவளை உற்றுப் பார்ப்பதை உணர்ந்து முகத்தை திருப்பிக் கொண்டாள். கண்கள் கலங்கி கொட்டி விடுமோ என்று பயமுறுத்தின.

இந்த நிகழ்ச்சி அவள் மனதில் துளிர்த்து நின்ற சந்தோஷத்தையும் எரித்து பாலையாக்கியது போல கிடந்தது.

பஸ்ஸில் இருந்து இறங்கி வீட்டை நோக்கி நடக்கும் போது அவள் மனம் எந்த நினைவுமின்றி வீதியில் காணும் கார், பஸ், சைக்கிள், பக்கத்தில் அடுக்கியபடி கிடக்கும் வீடுகள், பெண்கள் குழந்தைகள் என்று மோதி உடைந்து எதிர்ப்படும் புதிய காட்சிகளில் லயித்தபடி ஒரு குழந்தை மனமாய் இருந்தது.

வீதிக் கதவை திறந்து உள்ளே நுழைந்த போது ரகு

அவள் புதியதாக பதியமிட்டிருந்த நாற்று மேடையில் ஏறி நின்ருன்.

“டேய் இறங்கடா கீழே...”

“மாட்டேன்...... இதில என்ன நடப்போறீங்க......”

அவன் இறங்காதது அவளால் தாங்க முடியாமல் இருந்தது.

பளாரென அவள் விட்ட அடியை தொடர்ந்து அவன் கதறலால் அந்த வீடு எதிரொலித்தது.

“ம் வந்ததும் வராததுமா ஏன் அவனேட போருய் உன்ர மனசில ஏதும் இருந்தா அத பிள்ளைகளிட்ட ஏன் காட்டிருய். ம் உனக்கு என்னத்த சொல்லுறது பெத்தா தானே தெரியும்......”

வயிற்றை தள்ளியபடியே வந்த அண்ணியின் வாயில் வந்த வார்த்தைகள் அங்கு இரண்டுபேரை பாறையால் தாக்கியது. ஆனல் அதுவெவ்வேறு முறையில்.

“ஆமடி நான் பெருததால வந்திட்டன். ஆன உன்னிட்ட கையேந்தலையே”

“அட நான் உங்கள ஏன் சொல்லுறன். நான் தமயந்தியல்லவோ கண்டிச்சன் இப்படியா அடிப்பார்கள்......”

உள்ளே விடு விடென போகும் அக்காவை கண்வெட்டாமல் பார்த்த தமயந்தியின் வயிறு எரிந்தது.

கடவுளே மனிதர்களுக்கு பேசும் சக்தியை ஏன் படைச்சியோ பெத்தால் தானே தெரியும்.உண்மைதான் ஆன... நான் கலியாணமே பண்ணிக்காமல் எப்படி பெறுகிறது?

அசிங்கமாக வெடிக்க விருந்த வார்த்தைகளை கூட்டி விழுங்கியவாறு உள்ளே போனள் தமயந்தி.

தமயந்தி உடுப்பு மாற்ற அறைக்குள் நுழைந்தபோது அவள் அக்கா வாசற் கதவில் தயங்கி நின்று சுற்று முற்றும் பார்த்ததுஇவளுக்கு வேடிக்கையாயும், புதியதாயும் இருந்தது.

“என்னக்கா...... அண்ண எங்க .... ?”

“ஸ்...... சும்மா கெட...” மெல்லியகுரலில் அடக்கிவிட்டு உள்ளே தமயந்தியின் அருகே வந்து மௌனமாக நின்ருள்.

“என்னக்கா.?”

“தமா உன் அண்ணன் உனக்கு யாரையோ பேசிட்டு வந்திருக்கிருனும். அது சரியா வராட்டியும் வேற இடத்தில நிச்சயம் பண்ணிட்டுத்தான் இந்த வீட்டவிட்டு போகப் போருனும். என்ன மோடியம்மா அவன் பெண்டாட்டி பிள்ளைப்பெறுவுக்கு செலவு தாவெண்டு உன்னைத்தான் கழுத்தறுப்பான்... சொல்லிப் போட்டன்.”

“இப்ப ஆள் எங்க......? அந்தா வாருர்....”

## உங்களுக்குத் தெரியுமா?

ஒரு கோழிக்குஞ்சை அப்படியே ஆடாமல் அசையாமல் நிற்க வைத்து ஓவியமாக வரைந்தார் அமெரிக்க ஓவியரான “நார்மென் ராக்வெல்” அப்படிக் கோழிக்குஞ்சை நிறுத்தி சாத்தியப் பட்டது கிடையாது. அதற்கு ராக்வெல் சொன்னர். கோழிக் குஞ்சை கையில்வைத்துக் கொண்டு இரண்டொரு நிமிடம் முன்னும்பின்னும் ஆட்டினல் அதற்கு ஒரு மாதிரியாய் மயக்கம் வரும். வசியம் பண்ணின மாதிரி ஐந்துநிமிடத்திற்கு அசையாமல் நிற்குமாம்.

— கலைராஜன் —

“என்ன தமா அக்கா என்னவாம் விசயம் சொன்னவே......”

‘ஓம் எல்லாம்சொன்ன...’

“உனக்கு சம்மதமே......”

திடீர் என வெட்கத்தால் தலைகுனிந்தாள்.

“சரி சரி நான் வெளியில போறன் ஏதும் சாமான் வாங்க வேணும் எண்டால் காசத்தா......”

“அக்கா ஏதும் வாங்க வேணுமே...”

“ம்...... எனக்கென்ன...... சீனி... அரிசி, தேயிலை......”

வார்த்தைகளை முடிக்காமல் விலகிப் போகும் சகோதரியை தமயந்தி மௌனமாக பார்த்தாள்.

“ம்... என்னத்த சொல்லுறது தான் வாழாட்டிப் போன மற்றவர்களும் அதே மாதிரியா போயிடணும் எண்டா என்ன செய்யிறது? இப்பவே சொல்லுறன் தமா, உனக்கு கலியாணம் ஆன பிறகாவது அக்காவ வெளியில விட்டுடு பிறகு உன்ர குடும்பம் நிம்மதியாயிராது...ஓம்...”

எதுவித வார்த்தைகளும் இன்றி அவள் நீட்டிய 50 ரூபாத்தாளை வாங்கியபடியே போகும் சகோதரனை அதே கூர்ந்த பார்வையுடன் பார்த்தாள்.

ம்... எதுவும் நடந்தாப் பிறகு தான் சொல்லமுடியும் அண்ண... கடவுளே என்ன மனிதர்கள் அப்பா இவர்கள்? காலையில் இருந்து காணப்பட்ட சில கலகலப்புகள்ஓய்ந்து,தான் ஓர் கிழவியாகிவிட்டதைப் போல ஓர் சூழ் நிலை.

அன்றையப் பேப்பரை கையில் வைத்துக் கொண்டு புரட்டிக் கொண்டிருந்தாள் தமயந்தி. இதில் எதவாசிக்கிறது? நாமே நமக்கு பாரமா இருக்கிறப்போ மற்றமனிதர்களது பாரங்களையும் ஏற்றியாகணுமா......

திடீர் என அந்த சதுரங்கள் மனதை இழுத்தன. விரக்தியான சிரிப்பும் கூடவே இழுபட்டது. மணமகள் தேவை, மணமகன் தேவை. இவர்களும் என்னைப் போலவே தவித்துக் கொண்டு இருக்கிறவர்களா? சீ காதலித்தாவது ஒரு மனிதனை சொந்தமாக்கினேன சீ...

பாடசாலை நாட்களில் அவள் பின்னல் திரிந்த அந்த இளைஞன் கண்ணின் முன் வந்தான். படத்தியேட்டரில்கண்டு

பின்னால் வந்து தொடர்ந்தவர்கள், பஸ்ஸில் கண்ணால் பேச அழைத்தவர்கள் .. ஓ ... அந்த வயது, காலம் எல்லாம் கடந்து விட்டது. அவர்களை நெருங்கவும் விடாமல், நான் நெருங்கவும் முடியாமல் தவித்துத் தவித்தே கடத்தி விட்ட காலங்கள். திரும்பவும் வரவே வராத இல்லை என்னால் நினைத்து, ரசித்து பார்க்க முடியாத இறந்தே போன காலங்கள்.

திருமண விளம்பரத்தில் அவள் கண்கள் ஓடின. அதில் ஓர் விளம்பரத்தைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டன. அவள் விழிகள் அந்த விலாசத்தை பள்ளி மாணவி போல ஒரு பரீட்சைக்கு எழுதப்போகும் ஆவலுடன் மனதுள்ளாக பாடமாக்கினாள். தன்னையாரும் கவனிக்கிறார்களோ என்ற கூச்சத்தோடு, பயமும் கூட எழுந்தது.

"தமோ இங்க உன்னை யார் தேடி வந்திருக்கினம் எண்டு பார்... ......" அண்ணியின் குரலில் எத்துப்பட்டவளாக எந்தப்புதுத் தொல்லை வந்து விட்டதோ என தேம்பிய படியே அறையை விட்டு வெளியே வந்தாள்.

"அட நீங்களாக்கா என்ன நிக்கிறீங்கள் இருங்கோவன்"

"ஓம் தமா என்ன அண்ணிக்கு இதுதான் மாதமோ... அண்ணனை இப்பதான் றோட்டில கண்டனான். பெடியன் சுறுசுறுப்பா திரியிறான். இந்த வருஷத்துக்குள்ள எப்பிடியும் உன்னை கரையேத்த வேணுமாம். அதுக்குத்தானும் வந்தானும் காரியம் நடவாமல் போகானும்... ஏதோ கடவுள் கண்திறப்பான்"

ம் . . .. கடவுள் கண்ணைத் திறந்துதான் இருக்கிறான் ஆனா நாம் முயற்சிக்காம இருந்தா எது வலிய வரும். அப்பிடிவர நான்தான் பெரிய அழகியா? இல்லாவிட்டால் என்னிடம் அப்படி பணம், சொத்துகூட கொட்டிக் கிடக்கவில்லையே.... அக்காவ அவ மனதிற்கு ஆறுதலளிக்கிறதுக்காயும் இந்த வீட்டில் நான் மட்டும் முளிச்சுட்டு எப்படி காலம் தள்ளுறது என்ற காரணத்தால அதிலும் மேலா இருக்கிற பாசத்தால என்னை அழைச்சபோதே அண்ணன் மட்டுமா சின்னண்ணா அண்ணி எல்லாருமே நான் அவவின்ர சொத்தப் பறிக்கத் தான் திட்டமிட்டிருக்கிறேன் என்று கூவி என் மானம் எனக்கே தெரியாத ஆடவர்களுடன் பறிபோனதாக ஊர் உலகத்திற்கு பறை தட்டி... ஓ...அவர்கள் மீண்டும் உறவுகளை புதுப்பித்துக்கொண்டு என் பலவீனத்தை ஆயுதமாக, தற்காப்புக்கேடயமாக ஆக்கிக் கொண்டு நெருங்கும்போதெல்லாம் நான் ஏன் குழைந்து போகிறேன்......ஏன்.....எனக்கு என்மீதே நம்பிக்கை இல்லையா ......?...இல்லாவிட்டால் நான் தனித்து விட்டேன் என்ற பயத்தாலா...எது எதுவாயிருக்கும்... ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. மற்ற மனிதர்களைக்கண்டு நான் பயப்படுகிறேன். துணையற்றவள் என்ற ரீதியில் என்னுடன் தவறான முறையில் நெருங்குபவர்களை தவிர்க்க நான் தனிமரமல்ல எனக்கு பல விழுதுகள் உண்டு போங்கடா எனவிலக்க...ஆனா அந்த விழுதுகளே என்னை விழுங்க முயற்சிக்குதே......ஓ......எனக்கு கட்டாயமா ஒரு துணை தேவை நான் நிஜமான வாழ்க்கை வாழ ஒரு துணை...

"என்னம்மா தமயந்தி பேசாம இருக்கிறாய்....... அட அசடே இது என்ன கண் எல்லாம் கலங்கி...."

சரசு அவளை சமாதானப் படுத்த முயன்றாள்.

"என்ன மனே உன்ரதங்கச்சி வர வர குழைந்தையாகிறா..."

"ம்...நான் என்னக்கா பண்ணுறது எனக்கு பிள்ளை இல்லை ஆனா இவ பிள்ளையாபோயிட்டா. இவளுக்கும் சீக்கிரமா கலியாணம் ஆகி நல்லா வாழ வேணும்...ஆனா நல்லவனா கிடைச்சிடவேணும். அதுதான் நான் பிராத்திக்கிறன்..."

அட அக்காவா கதைப்பது......மற்றவர்களிடம் ஒரு கதை என்னிடம் ஒரு கதையா........ சீ இந்த மனிதர்கள் ஏன் தான் தம்மைத் தாமே தாழ்த்திக்கொள்கிறார்கள் விவஸ்தை கெட்டவர்களாக...ம்

"சீ ஒன்றுமில்ல நீங்க பாட்டுக்கு ஏன் கவலைப்படுறீங்க? நான் அம்மா அப்பாவை நினைத்துக்கொண்டன்..."

"அது உண்மை தான் அவங்க இருந்திருந்தா இப்ப நீ பிள்ளையகொஞ்சிட்டு இருப்பியே அம்மா..."

அந்த வார்த்தையால் முகத்தை சுளித்தபடி எழுந்து போகும் அண்ணியை கண்ட போது தமயந்திக்கு என்னவோ

## இப்படியும் ஓர் அறிவித்தல்

மேற்கு ஜெர்மனியிலுள்ள இளைஞர் விடுதியில் தொங்கும் ஓர் அறிவித்தல் பலகையில் பின்வரும் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்கர்கள் தயவு செய்து காலை 2 மணிக்கு முன் அறைக்குத் திரும்பிவிட வேண்டும். ஜெர்மனியர்கள் காலை 6 மணிக்கு முன் எழுந்திருக்கக் கூடாது. இத்தாலியர்கள் 10 மணிக்கு மேல் பாடக் கூடாது. சுவீடிஷ்காரர்கள் தங்களுடன் பெண்களை அழைத்துவரக் கூடாது.

—கதிர்மாணிக்கம்—

ஒரு நிம்மதி. தான் தர்முடியாத சூநி யாரார்லேயோ கிடைச்சா சரி...

"அப்ப நான் போயிட்டு வாறன். எங்க அண்ணி...சின்ன அண்ணன் வாறதில்லேயே..."

"இல்லே அவர் மாத்தளையில் வேலே. அவருக்கும் நிறைய பிள்ளையள்..."

"ம்... எல்லாரும் தங்கட பாட்ட பாத்திட்டாங்க நீ... இந்தக் காலத்திற்கு பொருந்தாத பெண்..."

முணு முணுத்தபடி போகும் சரசுவின் பின்னல் சென்று வழியனுப்பிய தமயந்தி வீட்டிற்குள் திரும்ப வரும்போது அண்ணிபொரிந்து கொண்டிருந்தாள்.

"இவர்கள் எல்லாம் யார்? தங்கட வேலேய தாங்கள் பார்க்கவேனும். அப்பன் ஆத்த இருந்தா எல்லாம் நடக்குமாமே...ஓம் ஓம் நடக்கும் அது தான் மூத்த பெண்ணை சீரழிச்சாங்களே அது போதாதா? அவரும் தான் நாயா அலேயிறுர் ஏதே நல்ல இடமா பார்த்து நிம்மதியா வாழவைக்கனும் எண்டு.. சின்னண்ண நினேச்சுப்பார்த்தாரோ..."

"நீ சொல்லுறது சரிதான் நான் பட்ட பாடு போதாதா அவள் ஏன் சீரழியனும், இவங்களுக்கு யாரேனும் கலியாணம் பண்ணுட்டா மூக்கில வேர்த்திடுது. பண்ணிட்டா குழந்தை பெத்துக் காட்டாட்டியும் வேர்த்துடும். டசின் கணக்கிலே பெத்திட்டாலும் வேர்த்திடும்......ம்"

அண்ணியும் அக்காவும் மாறிமாறி தன்னையும் விமர்சிக்க ஆரம்பித்திடுவார்களோ என்ற பயத்தில் தமயந்தி அவசரமாக தன் அறைக்குள் போய்விட்டாள்.

அவளுக்கு தன் இயல்புக்கு புறம்பான ஒரு செயலே செய்ய வேண்டும் என மனம் முணுமுணுத்தது. விரக்திகளின் கூட்டே அவளது கூச்சங்களையும், அடக்க இயல்புகளையும் மரத்துப் போகச்செய்து விட்டது போல. ஏதோ ஓர் முடிவுக்கு போனவள் போல...

"தமோ......"

"என்னண்ணு வந்திட்டீங்களா..."

"ம்...என்ன விலே... குஞுகோஸ் ... தோடம்பழம் பிஸ்கோத்து லக்ஸ்பிறே, லீவா இத்தனேக்குமே பணம் சரி. நான் என் பணத்தில ½ றுத்தல் சீனி கால் றுத்தல் தேயிலே வாங்கியந்தன்..."

தமயந்தி ஒரு கணம் உறைந்து போனுள்...... இது என்ன விசித்திரங்கள்...

"அக்கா ஒரு டம்ளர் தேத்தண்ணி ஊத்தித்தா......இங்கேரும் இத்தாரும் இதுகள ரகுவின்ர கண்ணில படாமலையும்........ வாற 10ம் திகதியல்லே மாதம்..........நல்லா சாப்பிடும் வேற ஏதும் வேணுமே........"

தமயந்திக்கு தன் ரத்த நாளங்களெல்லாம் புடைக்க தன் சகோதரனை ஓங்கி அடிக்க வேண்டும் போல இருந்தது. அட உணர்ச்சிகளே நீங்கள் கூடவா என் காலே வாருகிறீர்கள்? காலநேரங்களில் வெளிப்படுத்த முடியாமல் அடங்கி அடங்கி செத்துப்போயே விட்டீர்களா............ நான் பெண் தானே...... ஒரு மனிதப்பிறவி தானே நான் ஏன் மற்றவர் போல இல்லே...... அவர்களைப் போலத்தான் வாழ விரும்புகிறேன்.......... மற்றவர்களைப் போலவே......

* * * * *

அவன் அலுவலகத்திற்கு வந்த அந்தக் கடிதத்தை பியோன் மேசைமீது வைத்து விட்டு அவனே அதிசயமாக பார்த்துச் சென்றுன். பின்னர் என்ன? அவள் அந்த அலுவலகத்தில் பணிபுரியும் ஆறு வருடங்களில் ஒரு கடிதமாவது வந்தது கிடையாதே. ரமாகூட அவளே விநோதமாக பார்த்த போது தான் திடீர் என ஒரு விசித்திர பிராணியாகிவிட்டோமோ என்ற நினைவு மேலிட அந்தக் கடிதத்தை தன் கைப்பையினுள் வைத்தாள்.

என்ன வாய் இருக்கும்... படி... படி என்று அந்தக்கடிதத்தி முடிவை அறிய மனம் தூண்டியது. நான் ஒருவேளை ஏமாற்றத்தை தாங்கவேண்டி வருமோ என்ற உறைப்பு அதைதிறக்க விடாமல் தடுத்தது.

"என்ன... தடிதம் போல..."

"ஓ.. அது சரி இப்ப எல்லாம் நீர் ஏன் பஸ் ஸ்ராண்டுக்கு வாறதில்ல......"

கதையை திருப்ப அவள் முயற்சித்த போது ரமா மிக உற்சாகத்துடன்'

"அப்பாடா, இன்றுவது கேட்டீர்களே, நீங்கள் கேட்கமாட்டீர்களோ என நான் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தேன். ஆக்கும்......" அவள் திடீர் உற்சாகம் தமயந்தியையும் கூட பற்றியது. ஓ இந்த மகிழ்ச்சி, திறந்த மனம் இதுகளை காண்பதுகூட சொர்க்கம் தான்.

"என்ன அப்பிடி பாக்கிறீங்க இப்ப நான் பஸ்ஸில போறதில்ல ஸ்கூட்டரில ஒருவருக்குப் பின்னல..... ம்......"

கதையை இடையில் விட்டு திருட்டு விழியை தமயந்தி மீது படர விட்டாள்.

"இந்த ஒவ்வீசில எல்லாருக்கும் தெரியும் உங்களைத் தவிர..." அவள் குரலில் பொய்க்கோபம்

"அட ... பார்த்தீரே எனக்கு சொல்லாம எல்லாத்தையும் நடத்திட்டீரோ..."

"நடக்க இல்ல...... நடக்கப்போகுது. மாசமுடிவில நடக்கும். நீங்க சொன்னது தான் சொன்னீங்க சொன்னபடி ஒரு மாதத்தின் பின்னல நடந்திட்டு "

"அப்படி நான் என்ன..."

"போச்சு... மறந்துட்டீங்களா...... பாரு உனக்கு முதவில பாரம் ஏறும்... எண்டு..."

"ஓ......!"

"உண்மை தான்...... நான் சொல்ல வெட்கப்பட இல்ல... அண்ணை தான் கவலைப்படாம இருக்கிறுங்களே நானே முயற்சிப்போமெண்ணுபாத்தா மீன் வந்தே விழுந்துட்டு......"

பட்டென சிரிக்கும் அவள் கோலம்... ஓ... காதல் வெற்றியில கூட முடிகிறதே......

"அப்ப கலியாணம் குட்டி குழந்தை......"

"அதெல்லாம் பின்னால உங்களுக்கு எப்படி......"

தன் மனதை திறந்து சொல்ல முடியாமல் அவஸ்தைகளுக்குட்பட்டவளாய்

"எனக்குத்தானே அக்கறைப்பட பலர் இருக்கிறுர்கள். ஏதோ படுவதாக காட்டிக் கொண்டு... நானும் இருக்கின்றேன்......"

ரமாவின் உற்சாகம் எல்லாம் வடிந்து மௌன தவத்தில் மூழ்கியவள் போல இருந்தாள்

சீ...... ஒரு அழகிய, இன்பமான நேரத்தை அவள் மனதில் இருந்து விரட்டி விட்டதே என் வார்த்தைகள். நான் எதற்குதான் லாயக்கானவள்? ரமாவின் விழிகள் அவள்மீது படரும் போது அந்தப் பார்வையை சந்திக்க முடியாதவளாய் தடுமாறினுள்.

" உங்களுக்கும் காலம் வரும் சிஸ்ரர் ........" நீண்ட மௌனத்தின் பின்பு வெளி வந்த வார்த்தைகள் தமயந்தியை நெக்குருசு வைத்து விட்டது.

* * *

"இவளுக்கு என்ன... சீ... மானம் கெட்டவள் . இந்த வீட்டில ஒரு நிமிசம் கூட இருக்க மாட்டன். இங்கேரும் போய் டாக்சி கூட்டி வாறன். பிள்ளைய தூக்கும்... டேய் ரகு போய் வெளிக்கிடுடா....... த்தூ...... இந்த வயசிலே இப்படி ஒரு...... காரியம் செய்வாளே...... நான்...... நான் ஒருத்தன் வேலைமினக்கெட்டு கலியாணம் பேசி... அவன்கள் நாளைக்கு வாறன் எண்டு சொன்னுங்கள்... இப்ப நான் எந்த மூஞ்சியோட சொல்லுவன் அவள் தனக்குத்தானே கலியாணம் பேசிப்போட்டு வந்திட்டாள். நீங்க இருந்து கலியாணத்தை பார்த்திட்டுப் போங்கோ எண்டு."

"அண்ணை இன்னொண்டையும் கூட்டிச்சொல்லுங்கோ நான் காதலிச்சுப்பிடிக்கயில்லை. பேப்பருக்கு எழுதிப் போட்டுப் பிடிச்சன் எண்டு..."

"ஓமடி... இப்ப நல்லாப் பேசுவாய். அவனின்ர துணிச்சல் தானே சொந்தச் சகோதரங்களையும் ஏசவைக்குது. இனி நானும் ஏன் இருப்பன்? எசமானும், எசமாட்டியும் வேலைக்குப் போக சமச்சு வைக்க வேலைக்காரியே வேணும்? இப்பவே நானும் போற"

"அக்கா"

வேதனையினுல் குரல் மெலிதாக வரம்... மனசுக்குள் எழுகிற பிரளயங்கள் உடலைக் கூட எவ்வளவு பாடுபடுத்துகின்றன!

"அக்கா... நான் அப்பிடி என்ன பெரிய தவற செய்து போட்டன் எண்டு எல்லாரும் வரிஞ்சுகட்டிக் கொண்டு நான் போறன், நீ போறன் எண்டு கத்திறியள் நானும் சும்மா தான் பேப்பரில் கண்டுட்டு எழுதிப் போட்டன். அவருட சம்மதிச்சு பதிலும் வந்தது. அத உங்களுக்குச் சொல்லாமல் அவர சந்திச்சு கதைத்தது தவறுதான். ஆனு அவரதான் கலியாணம் பண்ணப்போறன் எண்ட உடனே உங்கள் எல்லாருக்கும் ஏன் இந்த கோவம். அப்படியெண்டா என்ர கலியாணம் நடக்கிறதில உங்கள் ஒருதருக்கும் விருப்பமில்லை. இப்படியேகிடந்து செத்திட்டா ஏதோ வந்தவரை லாபம் எண்டு இருக்கிறியள் அப்படியா?"

"அடி பாதகி பேசிறத அளந்து கதையடி...... இப்பிடி பேசவைக்கிற சூத்திரதாரியையும் எங்களுக்கு தெரியுமடி'

உண்மைதான் அண்ணை உண்மைகள எப்பவும் ஒழிச்சு வைக்க ஏலாது ஆனு அத பேச துணிவு வேணும். ஆனு பொய்கள பொரிஞ்சு தள்ளலாம் மனம் போன அளவுக்கு அதுக்கு துணைதுணிவு தேவையில்ல. அது...தான் எல்லாராலேயும் ஏற்றுக்கொள்ளப்பட்டுடுமே. என்னைப்பற்றி எனக்கே புரியவைச்ச அந்த மனிதரின்ர துணையால நான் துணிவப் பெற்றிட்டன் அதுகள உங்களால தாங்கவோ சகிக்கவோ முடியாம இருந்தா நீங்க தாராளமா போகலாம்"

"சொந்தங்கள் தேவையில்லாம தானடி இருக்கும்"

"அப்பிடி இல்லை அக்கா' எல்லாருமா என்னை ஒதுக்கிக் கொண்டு போகிறபோது நான் தான் என்ன செய்யிறது? நானுக ஒருதரயும் போகச் சொல்ல இல்லை. ஆனு ....... போகிறவங்களை மறிக்கவும் மாட்டன்"

அவர்கள்....அவளின் உறவுகள்......அவளின் இரத்தத்தின் உடலின் பகுதிகள்....சொந்தச் சகோதரங்கள்.... மௌனமாக வேகம் குறைந்தனவாய் இயலாமையின் புறுபுறுப்புடன் உள்ளே மறைவதை மனத் திருப்தியுடன் பார்த்தாள்.

ஓ..... இவர்கள் வாழ்க்கைகள் புறம்பானவை. அதிலிருந்து ஒட்டியும் ஒட்டாமலும் நிஜமான வாழ்க்கையை வாழ வேண்டியது என் கடமை. நிஜங்கள் சகிக்கமுடியாத உருவங்கள்......தமயந்தியின் மனம் தனக்கு அமைந்துவிட்ட, அமைத்துக்கொண்ட துணையின் நினைப்பில் நிஜங்களின் வேதனைகளை மறந்து லயித்துப் போயிற்று.

(கற்பனையே)

ஒரு பகுப்பாய்வு:

# எஸ். முத்துகுணரத்தினத்தின்

# "நிறம் மாறுகின்ற நீலவானம்"

(சுடர் புரட்டாதி, 1981)

கதை பற்றிச் சிந்தித்த மேனாட்டு விமர்சகர்கள் ஒரு கதையைப் படைப்பவன் கவனிக்க வேண்டிய சில குறிப்புகளைத் தந்துள்ளனர்.

கதை சொல்பவனின் குரலில் உள்ள அதிசய உணர்ச்சி (excitement) வாசகனிடம் சென்றடையத் தக்கதாக, "குளிர்ந்த" ஈய எழுத்துகளில் வார்த்து, அச்சடிக்கும்போது, அதில தேங்கும்படி செய்யவேண்டும். இனி என்ன நிகழுமோ! என்ன வருமோ! என்ற திகைப்பு (suspense) உணர்ச்சி வரச் செய்ய வேண்டும். நிகழ்ச்சியின் தொடக்கப் புள்ளி (point) ஒன்றிலிருந்து பிரதம கதாபாத்திரம் ஒரு மாறுதலை (change) அநுபவித்திருக்க வேண்டும் அல்லது தனது அநுபவத்திலிருந்து ஏதாயினும் பாடம் ஒன்றைப் படித்திருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகச் சம்பவத்தை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சிகள் இணைந்து, ஒரு பூரண அலகாக அமைந்திருக்க வேண்டும்; அதில் தர்க்க ரீதியான தொடக்கமும், மையமும், முடிவும் இருத்தல் வேண்டும்.

அதாவது, கதைக்கு ஒரு கதைக்கரு (plot) வேண்டும். ஒரு முக்கிய பாத்திரம் நிச்சயமான பிரச்சனை ஒன்றைத் தீர்க்கும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்க வேண்டும்.

இந்த அடிப்படையை மனதுட்கொண்டு எஸ். முத்துகுணரத்தினம் எழுதிய "நிறம் மாறுகின்ற நீலவானம்" என்ற கதையைப் பகுப்பாய்வு செய்வோம். இது "சுடர்" (புரட்டாதி, 1981) இதழில் வெளிவந்தது. எடுத்த எடுப்பிலேயே கதாநாயகியை நாடக மேடைக்கு ஏற்றிவிடுகிறார். ஆசிரியர், "கவிதா கச்சேரியில் நுழைந்தபோது" என்று ஆரம்பித்து, நாம் கண் மூடித்திறக்கு முன், "சிவநாதன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்" என்று கதாநாயகனை — இல்லை "வில்லனை" — அறிமுகஞ் செய்துவிடுகிறார். நிகழ்ச்சியின் தொடக்கப்புள்ளியில் ஆரம்பித்து விட்டது, பிரதம கதாபாத்திரத்தின் இயக்கம்! — அசைவு!! மாறுதல்!!! அருகில் நிற்கும் கதாநாயகியின் வயோதிபத் தாய் அவளது நிலைக்களத்தைக் காட்டும் புள்ளி, புதிய சூழல் ஆளை எவ்வளவு (உணர்ச்சிக்கு) excitement க்கு ஆளாகிவிட்டது என்பதை "அமைதிப்படுத்த முயல்பவளாக வியர்வைத் துளிகளைத் துடைத்த" வருணனை வருகிறது.

விசில் பண்ணிக் குதூகலிக்கும் ஆடவன்! நம் உள்ளத்தில் "சஸ்பென்ஸ்" இனி என்ன நிகழப்போகிறது? இந்த எதிர் - புதிர் நோக்கு (encounter) என்ன மாற்றத்தைப் பிரதம கதாபாத்திரத்தில் ஏற்படுத்தப்போகிறது? என்ன பாடம் ஒன்றைக் கதாநாயகி படிக்கப் போகிறாள்? என்று எம் உள்ளத்தில் ஒரு வியப்புணர்வு. "சஸ்பென்ஸுக்கு மேல் சஸ்பென்ஸ்' "ஒரு நிமிடம் மிஸ்"......... என்னவோ ஏதோ என்று நம் மனத்தில் வரையப்பட்டு வருகின்ற கதாபாத்திர சித்திரத்தின் வெளிக் கோடுகளுக்கிடையே நிறந் தீட்டுகின்றன, தாயின் வார்த்தைகள்: "அவள் சரியான வெக்கறை........."

"சரியான பட்டிக்காடுகள்" இது தொடக்க நிலைக்களப்புள்ளி. அதிலிருந்து பாத்திரவளர்ச்சி ஆரம்பமாகிவிட்டது. ஆசிரியர் நேரே பாத்திர சித்தரிப்பின் மூலம் மட்டும் கதையை நடத்திச்செல்லாமல் குறியீடுகளின் மூலமும் கதையை வளர்த்துச் செல்கிறார். பிரதம பாத்திரத்தில் நிகழும் மாற்றங்களைத் தன் சொந்த வருணனையில் சொல்லாமல் பகைப்புலக் குறியிட்டுக் காட்சிகளை விவரிப்பதன்மூலம் செய்கிறார். இதன்மூலம் கரடுமுரட்டுத்தன்மை அசிங்கமான கிராமியம் ஆகிய அழகின்மைகள் தன்படைப்பில் தோன்றாது காப்பாற்றுகிறார். D. H. லோரன்ஸ் தன் "குறிஸாந்திம் மலரின் மணம்" என்ற கதையில் கடைப்பிடிக்கும் உத்திபோல, நம் ஆசிரியரும் சிலந்திபூச்சி வலை கட்டுவதைக் குறியீடாகப் பயன்படுத்துகிறார். கவிதாவின் ஒவ்வொரு மாற்றக்கட்டத்திலும் அக்குறியீடு வலைபின்னுகிறது. பெகிஞே என்ற இத்தாலிய சைத்திரிகரின் சித்திரங்களிற் போலப் பகைப்புலம் பாத்திரங்களிலும் கூடிய பரப்பளவில் அமைந்து, விஸ்தாரமாகக்கிடந்து முன்னுள்ள பாத்திரங்களை விளக்குகின்றது முதலில். இடைவெளிதூரத்தை மீண்டும் மீண்டும் தாவி வெற்றிபெற முயலும் சிலந்திவாய் நூற் திரவத்தை ஒழுகவிட்டு இணைதுக் கொள்ளத் துடிக்கும் குறியீடு வில்லனின் உள்ளத்தைப் படம் பிடித்துக்காட்டுகிறது. அவன் கதாநாயகனாயிருக்கக் கூடாதா என்று எம் இலட்சியக் கற்பனை உள்ளம், மனித இயல்புடன் நப்பாசை கொள்கிறது. ஆனால் அந்த ஆசை தலைதூக்காது அடிபோடுகிறது வலை பின்னும் சிலந்திக்குறியீடு. D. H. லோரன்ஸ் போலவே

முத்துகுணரத்தினமும் பெண்களின் நுண்ணிய உணர்வுகளை — மன அசைவுகளை சித்தரிக்கும் ஆற்றல் படைத்தவர் போலக் காணப் படுகிறார்.

கதா பாத்திரம் ஆரம்பப்புள்ளியிலிருந்து வளர்ந்துகொண்டு சென்ற நேர்கோடு உச்சத்திலுள்ள மையப்புள்ளியை யடைந்துவிட்டது. பலவந்தமாக ஒரு அதிர்ச்சியுடன் திசை திருப்பப்படுகிறது. உணவுமேசைக்கு வில்லனின் வருகை, அவனது ஷேட்டைகள் (accident) க்கு முந்திய நிகழ்ச்சிகள் போலவும், வாஷ்பேசின் அருகே வழுக்கி விழுதல், (accident) ல் மோட்டார் கார் கவிழ்ந்து விடுவது போலவும் தோன்றுகிறது. இரும்புத்தூணையும் கறையான் அரிக்கத்தொடங்கி விட்டது. கதை முக்கோணத்தின் உச்சியைத் தாண்டிவிட்டது. இனி இறக்கம்தான். (dinovement), படிப்படியாகக் கவிதா தன் அன்னையிடமிருந்து, பழைய சமூக மதிப்புக்களிலிருந்து, விலகுகிறாள், 'இதுவரை கட்டிக்காத்துவந்த பண்புகள் உள்ளத்திலிருந்து வியர்வைத் துளிகளாக வெளியேறிக் கொண்டிருந்தன ·மீண்டும் ஒரு புதிய· உருவகம்.

மீண்டும் சிலந்திவலைக்குறியீடு பயங்கரமாக எம்மை உறுத்து நோக்குகிறது. வில்லனது வெற்றிகளைக் குறிக்கச் சிலந்தி வலை! கதாநாயகியின் ஏக்கங்கள், மன உணர்வின் மாற்றங்களைக் குறிக்க வண்ணத்துப் பூச்சியின் தேன் இச்சை! இருவேறு குறியீடுகளும் ஒன்றுக்கொன்று நிரப்பு கோணங்களாய் திகழ்கின்றன எனப்புலப் படுகிறது. மணியும் பவளமும்போல இணைந்துள்ளன என்ற உணர்ச்சி தோன்றுகிறது. இரண்டின் இணைவிலும் நாத·முரண்பாடு இல்லை. ஒத்திசையுண்டு என உணர்கிறோம். 'அவளும் அதை ஓரளவு விரும்பினாள். அவள் மனம் மெழுகாய் உருகி அவனிடம் நழுவிக் கொண்டிருந்தது. சேரும் இடம் நல்லிடமோ எனத் தெளிவில்லாமலே சேர விரும்பினாள். "அப்பழுக்கற்ற ஸ்திரிகளின் இதயம் 'வில்லர்களிடம்— கயமையுள்ளம் படைத்தவர்களிடம் — எதனால் வசீகரிக்கப்படுகிறது? நிச்சயம் நடக்கும் நிகழ்ச்சியே என்ற ஃப்ரோய்டின் frend தத்துவம் மெய்யா? தாகூரும் தமது வயோதிபப் பருவத்தில் இப்படியான பெண் உளப் பிரச்சனைகளைச் சித்தரித்துச் சிறுகதைகளை எழுதினார். முத்துகுணரத்தினமும் கீழ்நாட்டு உளவியற் சிந்தனைகளில் மெல்லியராரின் பயிர்ப்பு— தொடுகைப் புலனுணர்ச்சியால் நெஞ்சுருகி எளிதில் தன்னை இழத்தல்— போன்றவற்றுக்கு முதலிடம் வழங்குவதை நன்கு அறிநது மதிக்கிறார்; அதனைத் தம் கதை மூலம் தெளிவாகச் சித்திரிக்க முயல்கிறார், என எண்ணத் தோன்றுகிறது.

ஆனால் சாதாரண உலகம், புதிய சூழ்நிலையின் தாக்கம் ஆளை எப்படி மாற்றுகிறது; அந்நியமாதல் எவ்வளவுக்கு வலிமைபடைத்த பாரம்பரிய வாதியையும் பலமிழக்கச் செய்கிறது; எந்தப் படிப்பும் எந்தப் பயிற்சியும் ஒரு பெண்ணின் இயற்கையை எவ்விதமும் மாற்ற முடியாது என்ற உண்மைகளை உணர மாட்டாது. அதன் குரலாக ஒலிக்கிறான் பீடி குடிக்கும் பியோன் பரமசிவம்.

"தூ இந்த ஊத்தையன்... உந்தப் பெட்டையளும் வாறபோது பத்தினியாய் வந்து பிறகு தங்கடை பேரைக் கெடுக்கிறதுக் கென்றே வேலைக்கு சேருகினம்"

சிவநாதனும், கவிதாவும் கூட்டத்தால் புறக்கணிக்கபபட்ட குரங்குகள், யானைகள் போன்று ஆகிவிட்டனர். தம் ejemein 'shaft' ஐ இழந்து விட்டனர். தம் சமூகத்தினால் (Community) புறக்கணிக்கப் படாமலிருப்பதற்காக, அதில் தாம் ஒரு ஒன்றிணைந்த அம்சம் என்ற பாதுகாப்பு உணர்ச்சியினால் பலம் பெறுவதற்காகத் தன் தனித்துவமான உள உணர்வுகளுக்கு அழியா வரம்பிட்டு இயல்பூக்கங்களை வேரோடு பிடுங்கி எறிந்து விட்டுத் தம் கூட்ட அங்கீகார உணர்வில் திருபதியுறுவார்களா? இல்லை அதைப் புறக்கணித்து விட்டுத் தம் உடன் தேவைகளை — உள, உடற்தேவைகளை அனுபவித்துத் திருப்தியுறுவார்களா? காலத்தின் போக்குப் பிந்தியதைத்தான் நியதியாகக் காட்டுகிறதா?

கதாசிரியர் தம் பிரதம கதாபாத்திரத்தின் அழிவைச் சுத்தரிக்கும் முறை துன்பியல் நாடகத்தின் பயங்கர உணர்வை(Fragie sense) நமக்கு உண்டாக்குகிறது. ரோல்ஸ்ரோய் அன்னகரீனினுவின் வீழ்ச்சியை ஒரே வாசகத்தில் எது நடக்கக்கூடாதென்று எதிர்பார்க்கப் பட்டதோ அது நடந்துவிட்டது" என்று முடித்தார். முத்துக்குணரத்தினம் இன்னும் சுருக்கமாக தாம் நேரே வருணிப்பதையே விட்டுவிட்டுக் குறியீட்டின் இறுதிகட்டமாகச் சிலந்தி தன்வலையில் விழுந்த பூச்சியின் உடலின் ஊனத்தைக்குடித்து முடித்து ஏப்பமிட்டு... ...உறங்க ஆரம்பித்தது" என்கிறார். துன்பநாடக உணர்வுக்கு முத்தாய்ப்பு—முற்றுப்புள்ளி வைந்தாகிவிட்டது. தற்கால வாழ்வின் கேலிச்சித்திரம் எழுத்தாளனின் இறுதிக் கோடுகளால் பூரணம் பெற்றுவிட்டது.

நீலவானம் நிறம் மாறுகின்றதுதான். பழைய சமூகவரம்புகள் அழிகின்றனதான்!! மற்றவர்களைப்போல இவர் தலைப்பை வைத்துக் கொண்டே குறியீட்டை வளர்த்துக் கொண்டு போகவில்லை. அதுவும் ஒரு நல்ல உத்திதான். காலம் செல்லச்செல்லக் கைபடியப் படியக் குணரத்தினத்தின் கதையெழுதும் கலை (Technipue) பூரணத்துவம் பெறும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

ஆ. சபாரத்தினம்.



# வடிவழகி கேட்ட வரம்

சிவமலர் செல்வதுரை

ராஜாவின் தோட்டம் வண்ணமலர்களாலும் சுகந்த வாசனைகளாலும் நிறைந்து போய்க்கிடந்தது. அது ஒரு வைகாசிமாதம். நிலவும் தென்றலும் போட்டியிட்டன. அங்கே. நிலவும் நிழலும் மாறி மாறிப் படிந்திருந்தது போலவே, சங்கிலியன் மனதிலும் இருளும் ஒளியுமாகத் துயரமும் மகிழ்வும் கலந்து போய்க் கிடந்தன.

சங்கிலியன் மனதில் அந்த அழகியின் சிரிப்பு நிலவுக் கீற்றாக வந்து ஒரு உற்சாகத்தைக் கொடுத்தது. ஆனால் சில தினங்களாக அவளைக் காணவே முடியவில்லை. 'என்ன காரணமாயிருக்கும்?' என்று நினைத்தபடி நிலவையும் நட்சத்திரங்களையும் பார்த்தான். வானத்தில் மேகங்கள் அழிந்து தோன்றிக் கொண்டிருந்தன. "வடிவழகியின் காதல் கூட இப்படிப் பட்டது தானோ?" என்று நினைப்பதுகூட அவனுக்குப் பெருந்துயரைத் தந்தது. அந்த வேளையில் மெட்டியும் பாதசரமும் கைவளையல்களும் தாளலயத்தோடு ஓசையிடும் சப்தம் கேட்டது. சங்கிலிமன்னன் திரும்பிப் பார்த்தான். "அதோ அவள்தான் வருகிறாள்" என்று அவன் உதடுகள் ஆனந்தத்தோடு சொல்லின. ஆனால் அருகில் வந்தவளின் கோலத்தை பார்த்தபோது அவன் துடித்துப்போனான். "வடிவழகி ஏனிப்படி முகவாட்டத்தோடு காணப்படுகிறாய்?" என்று அவனது வாய்துடித்தது. "மன்னனைக் கொன்றுவிடப்போவதாக ஊரில் பேசிக்கொண்டார்கள். ஒரு தடவையாவது அவர் முகத்தைப்பார்க்க வேண்டுமென்று துடித்தேன் ......இன்றைக்குத்தான் சந்தர்ப்பம் வந்தது......" என்று சொன்னவள் மேலே பேச முடியாமல் கதையை நிறுத்தினாள்.

"மன்னனிடம் உள்ள அன்பு அப்பா அம்மாவின் கட்டுப்பாட்டையும் மீறி இங்கே தேடிவரச் செய்திருக்கிறது. இல்லையா வடிவழகி! ஆமாம்! எங்கே சில நாட்களாக உன்னைக் காணவில்லை ......" மன்னன் விசாரித்தான்.

"பிரபு ...... தாங்களே சொன்னீர்களே! அப்பா அம்மாவின் கட்டுப்பாடென்று சொல்லி அதுதான் காரணம் ...அதுவும் அந்தக் கட்டுப்பாடு இப்போது இன்னும் இறுகி விட்டது" தரையைப்பார்த்தபடி சொன்னாள் வடிவழகி.

"சில நாளைக்குள் உடம்பு இளைத்து விட்டதே!" என மன்னன் அன்போடு விசாரித்தான்.

"எல்லாம் உங்கள் ஞாபகம்தான்" என்று அவள் தலை குனிந்து கொண்டாள்.

"கொஞ்சம் பொறுத்திரு; உன் சிறையை உடைக்கப் போகிறேன். உன்னை என்னோடு அள்ளிக் கொள்ளப்போகிறேன்" என்றான் மன்னன். அவள் நிராசையோடு பார்த்தாள். அவள் மனதினுள்ளே தன் தாயாரிடம் தந்தையார் பகலில் பேசிக்கொண்ட செய்திகள் எல்லாம் நினைவு வந்தன.

* * *

"இன்றைக்கு நான்போர்த்துக்கேயக் கொம்பனியார் கூடச் சேர்ந்தால் கோடி, கோடியாகக் கொட்டிக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். என்கோபம் சங்கிலியன் மீதே தவிர, நாட்டின் மீது அல்ல என்பதால்தான் நான் அவனது அண்ணன் மகன் பக்கத்திலேயே இருக்கிறேன். அவனை அரசனாக்குவேன். நான் ஒவ்வொரு காரியத்தையும் ஒழுங்காகச் செய்கிறேன். அதற்காக வழி வகுக்கிறேன் நாட்டு விடுதலைக்கு வழி வகுப்பேன். அந்த அந்நியர்களைத் துரத்துவேன். நாட்டு விடுதலையை ஏற்படுத்துவேன்...... அது முடிந்ததும் சங்கிலியனைத் தீர்த்துக்கட்டுவதிலும் குறியாக நிற்பேன். அதன் பின்னர் அவன் அண்ணன் மகன் ஆட்சிக்கு வருவான் என் மகள் வடிவழகி அவனது ராணியாவாள். அதாவது தர்பார் என் கைக்கு வரும்" என்றார் அவள் தந்தை.

"நான் சொல்வதைக் கேளுங்கள் அப்பா! நீங்கள் என்னைப்பெற்ற தந்தை மன்னனோ என் மனதைக்கொண்ட கணவர். என் மஞ்சள் குங்குமம் நிலைக்கவும் என் மகிழ்ச்சி தழைக்கவும் நான் உங்களிடம் ஒரு வரம் கேட்கிறேன். என் கழுத்தில் தாலி கட்டாத போதும் மனம் வரையில் அவர் என் கணவர். அந்தக் காதலனைத் தவிர்த்து ஓர் உலகம் இருப்பதாகவே அறியாத உங்கள் மகள் ஒரே ஒரு வரம் கேட்கிறேன். நேரடியாகவோ மறைமுகமாகவோ அவர் உயிருக்கு ஒரு ஆபத்தும் ஏற்படாது என்ற உறுதியை மட்டும் எனக்குக் கொடுங்கள் அப்பா!" என்று தந்தையாரின் காலைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கதறவேண்டும் போலிருந்தது வடிவழகிக்கு... ஆனால் அவள் தன்னைக் கட்டுப் படுத்திக்கொண்டாள்.

தன் அப்பனும், சங்கிலியனும் அவனது அண்ணன் மகனுமான எல்லாரும் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடுபவர்கள் தானே! என்பது அவளுக்குத்தெரியும் ஒரே கொள்கைக்காகப் போராடும் சிலருள் பயங்கரமான பகை இருந்தால் அந்தக் கொள்கை எப்

படி வெற்றி பெறும்? என வடிவழகி கவலையோடு யோசித்தாள்.

அலைக்கழிந்து கிடந்த யாழ்ப்பாண ராச்சியத்துக்குப் போர்த்துக்கேயர் மட்டும் ஒரே எதிரியாக இருந்தால் அது அடிமைப்பட்டிருக்கவே நியாய மில்லை. உட்பகையும் உள்ளக் குமுறலும் அண்ணனையே தம்பி காட்டிக் கொடுப்பதுதான் இந் நாட்டை அடிமையாக்கிற்று. இன்னும் அந்நியருக்கு ஆதரவாகப் பல தலைமைக்காரர்களும் அதிகாரிகளும் இலைமறை காயாக இருக்கிறார்கள். அவர்களையும் சாய்த்து—அந்நியரையும் துரத்த ஒரு போர் துவங்கப் போகிறது. இந்த நேரத்திலுமா உட்பகை? என்று கலங்கினாள் வடிவழகி.

அவளிடம் அன்பு காட்டும் அப்பா, அவளது அன்புக்குரியவனிடம் வஞ்சம் காட்டுகிறாரே! இந்தச்சிக்கலை எப்போது எப்படித் தீர்க்கலாம்? என்று அவன் குழம்பினான்.

"ஒரு வேளை சூழ்நிலை காரணமாக விடுதலைப்பட்டாளத்தையே கொம்பனிக்காரருக்குக் காட்டிக் கொடுப்பது மன்னனைச் சாய்ப்பதற்கு நல்ல வழி என்று கண்டால் என் அப்பா அதையும் செய்வாரோ!" என்று எண்ணிய வடிவழகிக்கு அவளையறியாமல் கண்கள் பனித்தன.

அவள் தொடர்பற்ற சிந்தனைகளில் போய்க் கொண்டிருந்தாள்.

"நான் இறந்துவிட்டால் எனக்கொரு தொல்லையும் இருக்காதே!" என்று ஒருகணம் சிந்தித்தாள். அவள் சாவைக் கண்டு அஞ்சுபவளல்ல. ஆனால் ஒரு தடவையாவது காதலனுடன் வாழவேண்டும் என்ற ஆவல் அவளுள்ளத்தில் மேலோங்கிநின்றது.

* * * * *

"உட்கார் வடிவழகி ஏன் நின்றுகொண்டிருக்கிறாய்" என்றான் மன்னன் அன்போடு. "ஹூம்!" என்ற பெருமூச்சோடு தன் பக்கத்தில் அமர்ந்து கொண்டவளை அப்படியே சாய்த்துத் தன் மடியில் படுக்க வைத்தான் மன்னன். சங்கிலியன் மடியிலே தலைவைத்துப் படுத்திருந்த வடிவழகி அவனது இடுப்பைச் சுற்றிக் கைகளைப் பற்றியபடி சற்றுக் கண்களை மூடினாள். முழுக்க அமைதியில் ஓய்வு கொள்பவள் போல் காணப்பட்டான். அவளது வனப்புமிக்க மேனியினைத் தடவிக் கொடுத்தபடி தனக்குள்ளாகவே ரசித்துக் கொண்டிருந்தான் மன்னன். அவள் தலையைக் கைகளால் கோதினான். "வடிவழகி!" என்று அன்பொழுகச் சொன்னான். இந்த உலகில் நீ இல்லாமலிருந்தால் மனதுள் நான் தன்னந் தனியாகி இருப்பேன்" என்றான் அவன். அவன் வாயைப் பொத்தினாள் அவள். அவனையறியாமலே கண்கள் மெல்லிய உறக்கத்தில் போகப் பார்த்தன. அப்பாவின் மனதும் நினைவும் நெஞ்சில் படமாக விரிந்தன. உறக்கம் விடைபெற்றது.

"சங்கிலியனைக் கொலை செய்வது, அவனது அண்ணன் மகனை அரியணைக்குக் கொண்டு வருவது அவனை வடிவழகிக்கு மணம் செய்விப்பது" என்பது தான் அப்பாவுடைய திட்டம். சங்கிலியன் ஆட்சித்தர் பாருக்குள் இதே கொள்கையுடைய இரண்டொருதர் அப்பாவுடன் ஒற்றுமை. எல்லோர் சித்தமும் வடிவழகியை மையாக வைத்துக் கொண்டு சங்கிலியைச் சுற்றுகின்றன. ஆனால் வடிவழகியோ...... பூரணமாகச் சங்கிலியன் மடியில் நிம்மதியைத் தேடி நிற்கிறாள்.

"என் அப்பா இவரிடம் அன்புள்ளவராக மாறி, நானும் மற்றும் எல்லோரும் மகிழ்வாக வாழக்கூடிய சந்தர்ப்பம் வராதா! "என்ற கற்பனையில் இறங்கினான். துயரம் வரும் நேரத்தில் இன்பங்களைக் கற்பனை செய்வது தூக்கத்துக்கு நல்ல மருந்துதான். வடிவழகியும் இன்பக்கற்பனையால் கண்கள் தூக்கத்துடன் உறவு கொள்ள சங்கிலியன் மடியில் முகம் புதைத்து தூங்கினாள்'

பொழுது புலர்வதற்கான அறிகுறிகள் தோன்றியபோது அவள் கண் விழித்தாள். தூரத்தில் இரண்டு குதிரைகள் வரும் காலடியோசை கேட்டது' யாரோ சேவகர்கள் மன்னனைத் தேடிக்கொண்டு பூங்காவுக்கே வருகிறார்களோ?"

## பதினாறும் பெற்று... என்றால்

திருமண வைபவங்களின் போது பெரியோர்கள் மணமக்களை பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க என்று வாழ்த்தியதைக் கேட்டிருக்கின்றோம். அதற்கு ஐயையோ பதினாறு? வேண்டாம் வேண்டாம். இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுக் காலத்தில் இரண்டே போதும் என்று கூறிச்சிரிப்பவர்களையும் கண்டிருக்கிறோம்.

உண்மையில் மிகப் பலருக்கு இந்தப்பதினாறு, என்றால் என்னஎன்றே தெரியாது. அவை பின்வருமாறு: கல்வி, வீரம், வெற்றி, மக்கள் துணிவு, பணம், தானியம், சௌபாக்கியம் இன்பம் நுகர்ச்சி அறிவு அழகு பெருமை தர்மம் நல்லகுடிப்பிறப்பு, தேகஆரோக்கியம்' ஆயுள், ஆகியன.

தகவல் :- கலைமாமணி காரைநகர்.

உருவகம்

# தலைகுனிவு

முதல் நாள் நல்லமழை! சுப்பன் வீட்டுக் கோழிகளால் வழமைபோல் அன்று இரை தேட முடியவில்லை.

கோழிகளுக்கு இரைதேடிக் கொடுக்கும் அளவுக்கு சுப்பனிடம் வசதியுமில்லை! நேரமுமில்லை. எனவே கோழிகள் தங்கள் உணவைத் தாமே தேடிக்கொள்ள வேண்டியது தான்.

சே! மாலைவரை சனியன் மழை விடவேயில்லை. அன்று முழுநாளும் பட்டினி.

மறுநாள்! நல்ல வேளையாக மழை பெய்யவில்லை. வானம் தூய்மையாய் கழுவித் துடைத்து விட்டகோயில் மண்டபம் போல் காட்சியளித்தது.

காலையிளஞ் சூரியன் சுள்ளென்று தனது கிரணங்களை வீசிக்கொண்டிருந்தான். சுப்பனின் கோழிகளுக்கு மிக மகிழ்ச்சி. இன்றைக்காவது காய்ந்தகுடலுக்கு ஏதாவது இரை தேடிக்கொள்ளலாமென்று.

கூட்டைத்திறந்ததும், தாய் நாட்டுக்காக விடுதலைப்போரிட்டு. சிறைப்பட்ட தியாகி, சிறையிலிருந்து விடுபட்டு சுதந்திரமடைந்த தனது தாய் நாட்டுக்குள் நுழையும்வேகத்துடன் கொல்லைப்புறக் குப்பை மேட்டை நோக்கி ஆவலுடன் ஓடிப்போய் கிளறிக்கொண்டிருந்தன. அங்குதான், சுப்பன் குடும்பத்தினர் சாணம் முதற்கொண்டு வீட்டுப்பாவனைக் கழிவுகள் யாவும் கொட்டுமிடம்.

சுப்பன் வீட்டுக்கோழிகள் சாணக் குப்பையைக் கிளறிக்கொண்டிருக்கும் போது பக்கத்தில் சுப்பன் வீட்டுக்கு எதிரே யுள்ள "மில்காரன்" வீட்டுக் கோழிகள் அங்கே "சும்மா உலாத்துக்கு" வந்தன.

அவைகள் மில்லில் சிந்தும் நெல் அரிசி, குருணல், தவிடு, என்று நன்ருகச் சாப்பிட்டு கொழுப்பேறியிருந்தன. அவைகளுக்கு சுப்பன் வீட்டுக்கோழிகள், அழுகல் குப்பையைக் கிளறிக்கொண்டிருப்பதைக் காண அருவருப்பும், ஏளனமுமாக இருந்தது. "சீ! இந்தக் குப்பையைக்கிண்டி கண்டகழிவுகளையும் தின்ன அருவருப்பாயில்லையே! இதுகளுக்கு வெட்கங் கூடக்கிடையாதுபோல! இப்படிக் கேவலமான சீவியம் சீவிக்கிறதுக்குக்காட்டி! செத்துப் போயிடலாம்."

இவ்வாறு சுப்பனின் கோழிகளுக்குக் கேட்கக்கூடியவிதத்தில் தங்களுக்குள் திமிருடன் பேசிக்கொண்டன. இதைக் கேட்ட சுப்பனின் கோழிகளுக்குத் தன்மான உணர்ச்சி தணலாகப் பீறிட்டது.

"இஞ்சருங்கோ! நாங்கள் அப்பிடியொண்டும் கேவலமாய்ச் சீவிக்கயில்ல! எங்கட உடலை வருத்திக் கஷ்டப்பட்டு உழைச்சுத்தான் சீவிக்கிறம்.

உங்களைப்போல மில்லுக்கு வாற ஊர்ச்சொத்தைச் சுரண்டித்திண்டு, கொழுத்து, உழைப்புப் பிழைப்பு இல்லாத மானங்கெட்ட சோம்பேறி வாழ்க்கை வாழயில்ல! கதைக்கிறதயோசிச்சுக் கதையுங்கோ! விளங்கிச்சுதோ!" என்று பொரிந்துதள்ளின.

இதைக்கேட்ட மில்க்காரன் வீட்டுக் கோழிகள், வெட்கித் தலை குனிந்த படியே வாயடைத்த நிலையில் அவ்விடத்தை விட்டு வேகமாய் அகன்றன.

சுப்பன் வீட்டுக்கோழிகள் தம்பாட்டுக்கு குப்பையைக் கிளறி இரை தேடிக் கொண்டிருந்தன.

"நிலாதமிழின்தாசன்"

---

என்று திகைத்தனர் அந்த இருவரும்.

"இப்போது எப்படித் தப்பிப் போவது?" என்ற கருத்தோடு ஒருவரையொருவர் பார்த்தார்கள்.

"இப்படிப் பேசிக்கொண்டேயிருந்தால் கண்டு பிடித்து விடுவார்கள். நான் புறப்படுகிறேன்" என்று அவன் அவளை மடியிலிருந்து எடுத்து அப்பால் இருக்க வைத்தான். தானும் எழுந்தான். அவள் ஆவல் தாங்காமல் "பிரபு!" என்ருன். மன்னன் மறுபடி அமர்ந்தான். டக்" கென்று அவளை மடியில் சார்த்திக் கொண்டு "நறுக்" என்று ஒரு முத்தம் பதித்தான்.

" அவள் உதட்டைத் துடைத்துக் கொண்டாள்.

"தைரியமாக இரு இன்னும் சில நாள்தான் உனக்கு'க் குமர் என்ற சிறைவாசம்.' என்ருன் மன்னன்.

"மன்ஞ" அவள் மெதுவா அழைத்தாள். மன்னன் மறுபடி அவளைப் பார்த்தான்.

"நான் சிறையிருப்பது கூடப் பரவாயில்லை. நம் நாடு சிறைப்பட்டிருப்பது அதை விடக் கொடுமை...... முதலில் நாட்டுக்கு வேண்டும் சுதந்திரம். அதன் பின்னர்தான் எனக்கு வேண்டும் சுதந்திரம்" என்ருள் அவள்.

மன்னனின் காதலியல்லவா? அவனது வேணவா அவளுள்ளத்திலும் இருக்காதா? ஒரு நோக்கிலுள்ள இரு மனங்கள்தானே காதலில் கலக்க முடியும்.

அவன் அவள் சொன்னதை அங்கீகரிப்பவன்போல் தலையை அசைத்தான். முறுவலித்தான். இருவரும் இரண்டு புறமாகப் பிரிந்து சென்றனர்.

(கற்பனையல்ல)

(வாசகர் வாய்மொழி தொடர்ச்சி...)

பாரதி சிறப்பிதழாக வெளிவந்த சித்திரை மாதச் சுடரில் 'எஸ். பி. கிருஷ்ணன் எழுதிய "தீக்குள் விரலை வைத்தால்" என்ற கட்டுரையில் விட்ட தவறுதலை (பிழை என்றே கூறலாம்). 'செல்வி ரூபா ஜோசப்' ஆடிமாத இதழில் சுட்டிக்காட்டியிருந்தது அறிந்த விடயமே! ஆனல் ஆவணி இதழில் கட்டுரை ஆசிரியர் அதை மறுத்துள்ளார்.

"ஏனடா நீ நேற்றைக்கிங்கு வரவில்லை' என்று கண்ணனிடம் தான் கேட்கிறர் பாரதியார்" என்று உறுதியாகக் கூறியுள்ளார்.

ஆனல். பாரதியார் கண்ணனிடம் அவ்வாறு கேட்டதாக பாடல் அமையவில்லை.

'ஏனடா நீ நேற்றைக்கிங்கு வரவில்லை'
யென்றல்

பானையிலே தேளிருந்து பல்லால்
கடிக்குதென்பார்;
வீட்டினிலே பெண்டாட்டி மேற்பூதம்
வந்ததென்பார்;

என்று கூறிய பாரதியார்,

சேவகரால் பட்ட சிரமமிக உண்டு கண்டீர்;
சேவகரில் லாவிடிலோ, செய்கை நடக்கவில்லை
இங்கிதனல் யானும் இடர்மிகுந்து வாடுகையில்;
எங்கிருந்தோ வந்தான் 'இடைச்சாதி நான்'
என்ருன்;

என்று தொடர்ந்து கூறுகின்றர். அந்த 'கண்ணன்' தான் நல்ல சேவகனக அவருக்கு வந்து வாய்த்திருக்கின்றன்.

எனவே, அவரிடம் முன்பிருந்த சேவகர்கள் நடந்து கொண்ட முறைகேடான முறை பற்றி பாரதியார் குறிப்பிடுகையிலேதான், 'ஏனடா நீ நேற்றைக்கிங்கு வரவில்லை' யென்றல், 'பானையிலே தேளிருந்து பல்லால் கடித்ததென்பார்' என குறிப்பிட்டாரேயன்றி கண்ணனிடம் அவர் அவ்வாறு கேட்கவுமில்லை; கண்ணன் அவ்வாறன ஒரு பதில் பாரதியாருக்கு வழங்கவுமில்லை என்பது தெட்டத் தெளிவு.

— மண்டூர் செல்வானந்தன் —

* * * * * * * * *

ஜே. ஆர். தனக்குத் தானே வெட்டும் குழியின் ஆழத்தைத் தெளிவாகக் காண வைத்துள்ளீர்கள் நன்றி. மனம் விட்டுச் சில வார்த்தைகள் பேசுவதை விட்டு சில மாதங்களாக அரட்டை அடிக்கிறதே சுடர், அரட்டையிலும் விஷயம் இருக்கிறது. பாராட்டுக்கள். கேள்வி பதில்கள் சூடு தணிகிறது. தட்டிக்கழிக்காமல் உறுதியான பதில் தாருங்கள். இளைய தலைமுறை அறிமுகம் தொடரட்டும். சிந்திக்க வைத்திடும் கவிதைகளோடு சிறந்த ஆக்கங்களைத் தாங்கி வரும் சுடர் நீடு வாழட்டும்.

செல்வி விமலா நடராஜா. அனலைதீவு,

* * * * * * * * *

தங்கள் ஆவணி மாதச் 'சுடர்' தலையங்கம் 'முற்பகல் செய்யின் பிற்பகல்' விளையும் என்ற தமிழ்ப் பழமொழியை நினைவூட்ட, 'தமிழ் போதும்! என்று கௌரிதாசன் கவிச்சுவை யூட்ட, கவிச்சரங்கள் தோரணங்கள் ஆட, 'காலபலன்கள்' சிலோன் 'குறி' காட்ட, அரட்டை அப்படியே அரசியலைப் புட்டுக் காட்ட, 'அரிபதில்கள்' அன்புடன் அரவணைத்து மகிழ இலக்கியச் சோலையில் சற்று இளைப்பாறி, அண்புமணியின் அழகுக் கதையில் பெண்ணின் 'சாதுரியமும்' அதனல் அவள் அடையும் ஏமாற்றமும் 'உள்ளங்கை நெல்லிக் கனியாக' உணர்த்திநிற்க, இளைய தலைமுறை நவம் அரவிந்தன் பற்றி இனியதோர் நினைவு தனைத்தந்து மகிழ்வூட்ட அனலையின் காவிய மானவளைக் கண்டு மகிழ்ந்தோம். அப்புறம் காவலூரின் அக்கினிக்குஞ்சுகள் 'அரச எந்திரத்தின்' கடமைகளை வெட்ட வெளிச்சமாக்க, எலிகள் உருவகம் எங்கள் தேவை எதுவென இயம்பிநிற்க அன்பளிப்பு கதை ஊழலுக்கு எதிராகச் சுட்டி நிற்க, 'அறுவையில்' அகமகிழ்ந்து, அகஸ்தியரின் 'நாவல்' ஆராய்ச்சியை அறிவுக்கண்ணுடன் ஆராய்ந்து, எதிரொலிகளின் 'இக்கட்டில்' மாட்டித்தவித்துத் தப்பித்து, உலகத்தமிழ்க் கவிதைத் தொகுப்பில் உலவிவந்து இடையிடையே நகைச்சுவைத் துணுக்குகள், செய்தித் துணுக்குகள் யாவற்றையும் சுவைத்து மகிழ்ந்து 100% கலப்பற்றதென விளம்பரம் தரும் 'பிரவுண்சன்' கோப்பியைக் கண்டு நிறைவெய்தியது.

கதிர். தம்பிராசா, மட்டக்களப்பு.

* * * * * * * * *

வரண்டுபோன கூச்சல்களுக்கு மத்தியில் ஓர் இனிமையான அறைகூவல்! நல்ல சில எழுத்தாளர்களை நமக்கு அறிமுகம் செய்தவர் அன்புமணி. அந்த வரிசை இன்னுமின்னும் தொடரவேண்டும். வித்தியாசமாய் வெளிப்படும் இளைய தலைமுறையினரைத் தேர்ந்து இனங்காட்டும் அவர்தம் மணியான பணிக்கு வாழ்த்துக்கள்! ஆசிரியருக்கு ஒரு விண்ணப்பம்: விகடனில் "சூரசம்ஹாரம்" செய்து ஓய்ந்திருக்கும் சுப்பிரமணியனிடம் ஏதாவது கேட்டுப்பார்க்கலாமே! கொடுத்து அருள மாட்டாரா, என்ன? சுடரில் தொடர்கதை இல்லையே என்ற பலரின் குறையையும் பூர்த்தி செய்வதாக அமையுமல்லவோ... ...! இடம் பறிகொடுப்பது பற்றி புதியவர்கள் சினக்க வேண்டாம். ஜனரஞ்சகமே இல்லாமல் சுடர் புதியவர்களுக்கு மட்டுமே களமாயிருக்க வேண்டுமென்கிற அடம் தேவையில்லாதது.

ரீ. எஸ். சிவகுமார். தாளையடி,

* * * * * * * * *

✦ சர்வோதயம்
✦ கிராமோதயம்
✦ மாவட்ட அபிவிருத்தி
✦ தேசோதயம்

MWS மில்க்வைற்

இவ்வாறு எல்லோரும் மேம்பாடு அடைதல் வேண்டும் என்றும் மகாத்மா காந்தி, இரவீந்திரநாத் தாகூர், சுப்பிரமணிய பாரதியார் முதலாய பெருமக்கள் பாடுபட்டார்கள், வழிகாட்டினார்கள்.

இவர்கள் சொன்ன வழியில்

மில்க்வைற் தொழிலகத்தார் தங்களால் இயன்றவரை பன்முகமாகப் பணிசெய்கின்றார்கள்.

உங்கள் அபிமானமும் ஆதரவும் தொழிலகத்தாருக்குத் தேவை

**மில்க்வைற் சேவை விசாலிப்பதற்கு**
**மில்க்வைற் தயாரிப்புகளுக்கு**

அபிமானிகள் ஆதரவுபெருகுதல் வேண்டும்

★ ஆதரவுபெருகினால் நற்பணிகள் பெருகும் ★

'மில்க்வைற்', யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233

## "சுடர்" நண்பர் வட்டம்

சுடர் வட்டம் மூலம் இலக்கிய நண்பர்—நண்பிகளுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தை அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கலாம். தெளிவான விலாசத்துடன் தங்கள் பொழுதுபோக்கு விபரக்குறிப்புகளுடன் அஞ்சலட்டையில் மட்டுமே அனுப்பிவைக்க வேண்டும்.

சுடர் நண்பர் வட்டம்
194ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு — 12.

## 'சுடர்' சந்தா விபரம்

ஆறு திங்கள் — 13-00
ஒரு ஆண்டு — 25-00
(தபாற்செலவு உட்பட)

நிர்வாகி அவர்கட்கு,

இத்துடன் அரை/ஒரு வருட சந்தா தொகையான ரூபா..........க்கான மணி ஓடர்/போஸ்டல் ஓடரை அனுப்புகிறேன். என்னையும் சந்தாதாரராக சேர்த்து ... ... மாதம் முதல் சுடரை அனுப்புமாறு வேண்டுகிறேன்.

முழுப்பெயர்: ...........................................

விலாசம்: ...........................................

...........................................

நிர்வாகி,
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.





இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு — 12 இல் உள்ள சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.